janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 அக்டோபர் 23 - அக்டோபர் 29 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 29




## அக்.14 முதல் 18 வரை ஆந்திராவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு

# சிவந்தது விஜயவாடா!




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு விஜயவாடா நகரில் அக்டோபர் 14 ஆம் நாள் துவங்கி 18 வரை நடைபெற்றது.**

முதல் நாள் நகரின் மையப் பகுதியில் இருந்து சந்திரா ராஜேஷ்வர் ராவ் திடல் வரை பேரணி நடைபெற்றது. பேரணியில் லட்சக் கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர். ஆயிரக்கணக்கான செம்படைத் தோழர்கள் மிடுக்காக அணிவகுத்து வந்தனர். பெண்களும், குழந்தைகளும் உற்சாகத்தோடு கலந்து கொண்டனர். ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களின் இருந்தும் பெரும் திரள் தோழர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். குறிப்பாக நெல்லூர் மாவட்டத்தில் இருந்து உழைக்கும் வர்க்க பெண்கள் தலையில் சுமைகளையும், இடுப்பில் குழந்தையையும் சுமந்து கொண்டு ஆர்வத்தோடு பேரணியில் நடந்து வந்தது கட்சியினர் மத்தியில் அர்ப்பணிப்பு உணர்வை தூண்டியது.

பேரணி நிறைவடைந்ததும் திடலில் திரைப்பட இசையமப்பாளர் வந்தே மாதரம் ஸ்ரீநிவாஸ் அவர்களின் இசை நிகழ்ச்சி நடந்தது. பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் தேசிய செயலாளர் நாராயணா வரவேற்புரை ஆற்றினார். நரேந்திர மோடி அரசின் மதவாதக் கொள்கைகளை கண்டித்த அவர், ஆந்திராவில் இருக்கும் ஜெகன் மோகன் அரசு ஒன்றிய அரசின் தவறுகளை கண்டிக்காமல் ஒத்து ஊதுவதாக சாடினார்.

பின்னர் பேசிய பொதுச் செயலாளர் து. ராஜா, கம்யூனிஸ்ட் கட்சியில் இளைஞர்கள் எங்கே என்று சிலர் கேட்கிறார்கள். இன்று நடந்த பேரணியில் செஞ்சட்டை அணிந்து கொண்டு வீறு நடை போட்டவர்கள் இளம் கம்யூனிஸ்ட்கள். இவர்கள் இந்தக் கட்சிக்கு மட்டும் அல்ல, நாட்டின் எதிர்காலம். பிஜேபி அரசை வரும் தேர்தலில் தோற்கடிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக அரசியல் கட்சிகளை ஒருங்கிணைத்து அரசியல் பணி ஆற்றும் என்று பேசினார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் பிரதி நிதிகள் மாநாடு நடைபெற்றது.

கூட்டம் நடக்கும் இடம் தோழர். குரு தாஸ் தாஸ் குப்தா நகர் என்றும், அரங்கம் ஷமீம் பைசி அரங்கம் என்றும் பெயர் சூட்டப் பட்டு இருந்தது.

கண்கவர் எல். ஈ. டி திரைகள் மாநாட்டு அரங்கை அலங்கரித்தன.

தேசியக் கொடி மற்றும் கட்சிக் கொடி ஏற்றப்பட்டு, தியாகிகள் நினைவிடதுக்கு செவ்வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு துவங்கியது.

தோழர். நாராயணா வரவேற்புரை ஆற்றினார். தோழர். து.ராஜா துவக்க உரை ஆற்றினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் தோழர். சீதாராம் யெச்சூரி, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர். திபங்கர் பட்டாச்சார்யா, பார்வர்டு பிளாக் கட்சியின் பொதுச் செயலாளர் தேவராஜ் ஆகிய இடதுசாரி தலைவர்கள் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

பின்னர், பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் மாநாட்டை வாழ்த்திப் பேசினர். அமெரிக்கா, போர்ச்சுக்கல், கியூபா, வியட்நாம், லாவோஸ், வங்கதேசம், இலங்கை, நேபால், பிரான்ஸ், கிரேக்கம், தென்னாப்பிரிக்கா, தாய்லாந்து நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சி பிரதி நிதிகள் பேசினர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசியல் அறிக்கை, வேலை அறிக்கைகளை பொதுச் செயலாளர் சமர்ப்பிக்க பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகள் அதன் மீது விவாதித்தனர்.

மாநாட்டின் கடைசி நாள் புதிய தேசியக் குழு, நிர்வாகக் குழு மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.



### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக டி.ராஜா தேர்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளராக டி.ராஜா, தேசிய செயலாளர்களாக கானம் ராஜேந்திரன், அதுல் குமார் அஞ்சான், அமர்ஜித் கவுர், டாக்டர் கே.நாராயணா, டாக்டர் காங்கோ, பினாய் விஷ்வம் எம்.பி., பல்லப் சென் குப்தா, ராமகிருஷ்ண பாண்டா, சையத் அஜிஸ் பாஷா, நாகேந்திர நாத் ஓஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 31 பேர் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். தேசிய நிர்வாகக் குழுவில் தமிழ்நாட்டிலிருந்து மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், ஏஐடியுசி மாநிலப் பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி, வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் சி.எச்.வெங்கடாசலம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

முன்னதாக 125 தோழர்கள் தேசியக் குழு உறுப்பினர்களாகவும், 11 தோழர்கள் மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இருந்து தேசியக்குழு உறுப்பினர்களாக இரா.முத்தரசன், மு.வீரபாண்டியன், நா.பெரியசாமி, டி.எம்.மூர்த்தி, க.சந்தானம், டி.இராமசாமி, வை.சிவ புண்ணியம், வஹிதா நிஜாம், எம்.ஆறுமுகம், மு.கண்ணகி ஆகியோரும், கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினராக திருச்சி எம். செல்வராஜும் தேர்வு செய்யப்பட்டனர்.



கட்சிக் கடிதம்

# தொடரும் துயரங்கள்!





பேரன்புமிக்க தோழர்களே!

**கடந்த சில நாட்களில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் மிகத் துயரமிக்கவை. நினைத்தாலே நெஞ்சம் பதைபதைக்கின்றது. தங்களின் பிள்ளைகளை படிக்க வைக்க, பணிகளில் அமர்த்த சாதிசான்றிதழ் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின வகுப்பினருக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுவது சாதி சான்றிதழ்கள்.**

வருவாய்த்துறை அதிகாரிகள், இச்சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள்.

கிராம நிர்வாக அதிகாரி தொடங்கி, அவரைத் தொடர்ந்து ஆர்.ஐ. என சுருக்கமாக அழைக்கப்படும் ரெவின்யூ அதிகாரி, அவரைத் தொடர்ந்து வட்டாட்சியரிடம் சென்று சான்று பெற்றாக வேண்டும்.

வசதி வாய்ப்புள்ளோர், அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் தாங்கள் இருப்பிடத்தில் இருந்து கொண்டே சாதிச்சான்றிதழ் மட்டுமல்ல; எத்தகைய சான்றிதழையும் பெற்று விடும் வாய்ப்பும், வல்லமையும் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர்.

ஆனால், சமூக, பொருளாதார நிலையில் வாழ்க்கையின் கடைக்கோடியில் உள்ள பட்டியல் இன மக்கள், அவர்களிலும் பின்தங்கியுள்ள பழங்குடி மக்கள், குறவர் இன மக்கள் சாதிச் சான்றிதழ் பெறுவது குதிரைக் கொம்பாக உள்ளது என்பது எவரும் அறியாத, அறிய முடியாத ஒன்றல்ல.

தன் குலமோ படிக்காத, படிக்க முடியாத, இயலாத, பள்ளி செல்ல வேண்டும், படிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு இல்லாத மக்களாக வாழ்ந்த பல பகுதி மக்களிடத்தில் படிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மெல்ல துளிர்விட தொடங்கி இருப்பது கண்டு சமூகத்தின்பால் அக்கறையுள்ள அனைவரும் வரவேற்பர்; மகிழ்வர்!

வரவேற்பும், மகிழ்ச்சியும் தொடர்வதற்கு மாறாக, தலையில் இடி விழுந்தது போல் செய்தி வருகின்றது.

மலைக்குறவ மக்களை நாம் நன்கறிவோம். அவர்களுக்கான வாழ்விடம் என்று ஒன்று நிரந்தரமாக இல்லை. பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களில் ஓரஞ்சாரமாக ஒதுங்கும் இடம் தேடி தங்களின் வாழ்விடமாக அமைத்துக் கொள்கிறார்கள். இம் மக்களால் எவருக்கும் தொல்லை இல்லை; துன்பமில்லை.

பிறரை துன்புறுத்தாது, மணிகளை அழகுற கோர்த்து மாலையாக்கி மணி மாலை விற்கும் கூட்டம்.

ஊசி, ஊக்கு, மணிமாலை என விற்று அதில் கிடைக்கும் குறைந்தபட்ச ஊதியத்தைக் கொண்டு தங்களின் வாழ்நாளை கடந்துசெல்லும் கூட்டமாக, நாடோடி கூட்டமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்களது ஆடை, அணிகலன்கள் எண்ணெய் இல்லா, செம்பட்டை படிந்து, சிக்குண்ட தலைமுடி, தாடி, மீசை என்று அலங்கோலங்களைக் கண்டு அருவருத்து ஒதுங்கும் மனிதர்கள் ஏராளம்.

ஏளனத்திற்கும் – எள்ளி நகையாடலுக்கும் உள்ளாகியுள்ள மலைக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த, காஞ்சிபுரம் மாவட்டம், படப்பையைச் சார்ந்த வேல்முருகன் – சித்ரா தம்பதியருக்கு ஒரு மகன், இரண்டு மகள்கள் உள்ளனர்.

தன் போன்றும், தனது குலத்தைச் சேர்ந்தவர்கள் போன்றும் தனது மகன் இருக்கக்கூடாது, அவனை பள்ளியில் சேர்த்து படிக்க வைத்து, மற்றவர்கள் வீட்டுப் பிள்ளைகளைப் போன்று தனது மகனும் படித்து பட்டதாரி ஆகவேண்டும்–

ஊசி, ஊக்கு, மணி விற்கச் செல்லக்கூடாது என்று கனவு கண்டவர் வேல்முருகன். அவரது கனவில் நியாயம் இருக்கிறது.



தனது மகனை பள்ளியில் சேர்த்து படிக்கவைத்து பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டு உள்ளான்.

தனது மகனுக்கு சாதி சான்று வேண்டும் எனக் கோரி திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு நாள் இருநாள் அல்ல, ஓரிரு மாதங்கள் அல்ல, கடந்த ஐந்தாண்டு காலமாக நாய் அலைச்சல் அலைஞ்சும் கால் தேய்ந்ததுதான் மிச்சம்.

சாதி சான்றிதழுக்காக ஐந்தாண்டுகாலம் யாராவது அலைந்து திரிந்திருப்பார்களா?

ஐந்தாண்டு அலைந்த போதும் சான்றிதழ் கிடைக்கவில்லை – மனம் வெந்து, நொந்து என்ன பயன்? நமக்காக யார் நியாயம் கேட்க போகிறார்கள்? நாடோடிகளாயிற்றே என்று நம்பிக்கை இழந்து விட்டார். யாரை நம்பியும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தவர், தனது உடலுக்கு தீயிட்டு உயிர்த் தியாகம் செய்யத் துணிந்து விட்டார்!

சாகத்துணிந்தவன் தன் மரணத்தை எங்கோ மேற்கொள்ளவில்லை. மிக, மிக பொருத்தமான இடத்தை தேர்வு செய்துள்ளார்.

அனைவருக்கும் நீதி வழங்கும் என்ற நம்பிக்கைக்கு உரிய இடமான சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தை தேர்வு செய்தார்.

மகனை நினைத்தார்; அவனது படிப்பை நினைத்தார். எண்ணி, எண்ணி நான் ஏமாந்தது போதும், நம்மை மதிக்காத சமூகத்தில் நாம் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்? என்கிற முடிவுக்கு வந்தார்.

தன் உடல் முழுவதும் பெட்ரோலை தானே ஊற்றிக் கொண்டு தனக்குத் தானே, தன் உடலுக்கு தீ வைத்துக் கொண்டார்.

தீ பற்றி எரிகின்றது, உடல் முழுவதும் சொக்கப்பானை கொழுந்துவிட்டு எரிவது போல் எரிகின்றது.

உடல் முழுதும் பற்றி எரியும் தீயைக் கண்டு, பதறிப்போன காவல்துறையினர், கொடிய தீயை அணைக்க முயன்று தீயை அணைத்தனர்.

விரைந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்; பயனேதுமில்லை. தீ கொடிய தீ, இரக்கமற்ற தீ, முருகப்பெருமானின் பெயரைத் தாங்கி நிற்கும் வேல்முருகன் உயிர் பறிக்கப்பட்டது.

மகனைப் படிக்க வைத்து, பட்டம் பெறச் செய்ய வேண்டுமென கனவு கண்ட வேல்முருகன் உடல் கருகி கட்டையானது. வேல்முருகன் தற்கொலை செய்து கொள்ளவில்லை; மாறாக தியாகியானார்.

அதிகார வர்க்கத்தின் ஆணவம், அலட்சியப் படுத்தல், ஆள் பார்த்து, உடை பார்த்து, பணம் பார்த்து, பகட்டு பார்த்து சான்றிதழ் வழங்குவது, கீழ்மக்களை அலட்சியப்படுத்துவது இத்துடன் நிற்குமா?

அல்லது பல வேல்முருகன்களை காவு வாங்குமா? இத்தகைய துயரச் சம்பவம் குறித்து சூரிய பிரகாசம் என்ற வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

உயர் நீதிமன்றம் இவ்வழக்கை தாமாகவே முன்வந்து விசாரிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை, உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் இவ்வழக்கை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது,

தனது மகனின் சாதிச் சான்றிதழுக்காக அதிகாரிகளிடம் மன்றாடிப்பார்த்த மலைக்குறவ சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் மனம் வெறுத்து உயர்நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றால் அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்.

அவரது மகனுக்கு என்ன காரணத்திற்காக அதிகாரிகள் சாதி சான்றிதழ் வழங்க மறுத்துள்ளார் என்பதை இந்த நீதிமன்றம் அறிய விரும்புகிறது.

அரசின் அனைத்து நலத்திட்டங்களையும் பெற சாதிச் சான்றிதழ்தான் முக்கியம். அவ்வாறு இருக்கும்போது அதிகாரிகளின் ஏன் அவரை அலைய விட்டுள்ளனர்.

எதற்காக அவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்? என்பது குறித்து தமிழ்நாடு அரசு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கை பொறுப்பு தலைமை நீதிபதி முன்பாக பட்டியலிட உயர்நீதிமன்றம் பதிவுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிகார வர்க்கத்தின் ஆணவத்தால், அலட்சியத்தால் ஏற்பட்ட துயரச் சம்பவம் இனியும் தொடராமல் இருக்க அரசு என்ன செய்யப் போகின்றது?

இவை ஒரு புறமிருக்க தமிழகத்திலும், கேரளத்திலும் மூடநம்பிக்கையின் உச்சமாக இரு பெண்கள் உட்பட மூவர் நரபலி கொடுக்கப்பட்டுள்ள கோரக் கொடுமை நடைபெற்றுள்ளது நம்மை பெரிதும் துயரத்தில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது அகில இந்திய மாநாடு



**கியூபா, வியட்நாம், ரஷ்யா, போர்ச்சுகல், தென் ஆப்பிரிக்கா, கிரேக்கம், இலங்கை, பங்களாதேஷ், பாலஸ்தீனம் உட்பட 16 நாடுகளில் இருந்து 17 கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதி நிதிகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாட்டில் வாழ்த்துரை வழங்கினர்.**

## உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் வாழ்த்துச் செய்திகள்

### சீனக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது தேசிய மாநாடு அக்டோபர் 14 முதல் 18 வரை நடைபெறுவதை அறிந்து உவகை அடைகிறோம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசிய துறையின் சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில், ஒரு முக்கியமான அரசியல் சக்தியாக, இந்தியாவின் தேசிய சூழலுக்கு உகந்த ஒரு சோஷலிச பாதையை நிர்மாணிப்பதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி பூண்டுள்ளது; இந்தியாவின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான மகத்தான பங்களிப்பைச் செய்துள்ளது. இந்த மாநாடு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு நிச்சயம் ஒரு புதிய உந்துவிசையை வழங்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது தேசிய மாநாடு இன்னும் இரு தினங்களில் (16.10.2022) கூட உள்ளது. அனைத்து வகையிலும், ஒரு நவீன சோஷலிச நாட்டைக் கட்டமைக்கும் புதியதொரு பயணத்தைச் சீனா மேற்கொண்டுள்ள இந்த முக்கியமான நேரத்தில் நடைபெறும் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். நமது இரு கட்சிகளின் மாநாடுகளை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனான நட்புறவைப் பலப்படுத்தவும், நடைமுறை அனுபவங்களில் இருந்து பரஸ்பரம் படிப்பினைகளைப் பெறுவதைத் தீவிரப்படுத்தவும், நமது இரு நாடுகள் மற்றும் கட்சிகளைப் புதுப்பிக்கவும், மேம்படுத்துவதற்குமான ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ளச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆயத்தமாக இருக்கிறது.

இந்த நூற்றாண்டில் நாம் கண்டிராத பெருந்தொற்று மற்றும் மாபெரும் மாற்றங்கள் ஆகிய இரண்டின் ஒன்றுபட்ட தாக்கத்தின் போக்கில் இன்று உலகம் இயங்கி வருகிறது. மாற்றம் மற்றும் கொந்தளிப்பான காலகட்டத்தில் உலகம் அடியெடுத்து வைத்துள்ளது. இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான கூட்டு முயற்சி மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பு இரு நாடுகளின் பொதுவான நலன்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்த பிராந்தியத்தின் நலனையும் பாதுகாக்கும். இத்தகையதொரு புதிய சூழலில், இந்திய-சீன நட்புறவை மேலும் சீராக மேம்படுத்த, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், இந்தியாவில் உள்ள இதர பெரும் அரசியல் கட்சிகளுடனும் இணைந்து பணியாற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு முழு வெற்றியடைய வாழ்த்துகள்!

### வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநாட்டை முன்னிட்டு, வியட்நாம் மக்கள் மற்றும் கம்யூனிஸ்டுகள் சார்பாக உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எண்ணற்ற சவால்கள் இருப்பினும், மார்க்சிய லெனினியத்தை உறுதியுடன் பின்பற்றுவதிலும், விவசாயிகள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் நலன்கள், நியாயப்படியான அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களை முன்னெடுப்பதிலும், இந்தியாவில் இடதுசாரி, ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளை முனைப்புடன் பலப்படுத்துவதிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சீரிய முறையில் தொடர்ந்து இயங்கி வருவது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்திய மற்றும் உலக அரசியல் அரங்கில் உங்கள் கட்சியின் நிலை மற்றும் பாத்திரத்தை நீங்கள் உயர்த்துவீர்கள் என்பதோடு 24 வது மாநாட்டு தீர்மானங்களின் நோக்கங்களை வென்றெடுப்பதுடன், மேலும் பல மாபெரும் வெற்றிகளைப் பெறுவீர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நமது இரு நாடுகள் மற்றும் கட்சிகளுக்கு இடையிலான நேர்த்தியான ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை மேலும் முன்னெடுக்கப்பட்டு, மேம்படுத்தப்பட வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது மாநாடு வெல்லட்டும்!

### கியூப கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது மாநாடு நடைபெறும் இந்தத் தருணத்தில் கியூப கம்யூனிஸ்ட் கட்சி அதன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தற்போது உலகம் எதிர்கொண்டு வரும் சிக்கலான சூழலுக்கு இடையில், அமைதி மற்றும் நீதி நிறைந்த ஒரு உலகத்திற்கான போராட்டங்களில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் பூண்டிருக்கும் உறுதிப்பாட்டை இந்த மாநாடு எடுத்துக் கூறுகிறது. நமது இரு நாடுகளின் கட்சிகள் மற்றும் மக்களுக்கு இடையிலான சகோதரத்துவத்தைத் தொடர்ந்து பலப்படுத்துவதற்கான உங்களின் விருப்பத்தை நாங்கள் உறுதிப்படுத்தும் அதே சமயத்தில், மாநாட்டுப் பணியில் வெற்றி பெற உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கியூபாவிற்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள வணிக, பொருளாதார மற்றும் நிதி தடைகளை எதிர்த்து கியூபா நடத்தி வரும் போராட்டங்கள் மற்றும் கியூப புரட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்து வரும் நிலையான ஆதரவுக்கு எமது நன்றியை நாங்கள் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது தேசிய மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு சார்பாக புரட்சிகர வாழ்த்துகளைச் சகோதரத்துவ உணர்வுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடுகள், இலங்கை கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு, என்றென்றும் அறிவின் ஊற்றாகவும், உத்வேகம் மற்றும் பலத்தை வழங்குவதாகவும் இருந்து வருகின்றன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இடையே நிலவி வரும் சகோதரத்துவம், நமது இரு கட்சிகளும் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே வலுவுடன் இருந்து வருகிறது.

இந்தியா மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கங்களின் நிறுவன தலைவர்கள், தங்களின் மாணவ பருவ காலத்தில் இருந்தே நெருக்கமாக இருந்து வந்துள்ளனர். பொருளாதார வீழ்ச்சி, நிச்சயமற்றதன்மை மற்றும் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் பாதித்து வரும் உலகளாவிய பிரச்சனைகள், சவால்கள் சூழ்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது தேசிய மாநாடு நடைபெறுகிறது.

1945 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதில் இருந்து, நாம் இருதுருவ(ஙிவீறிஷீ றீணீக்ஷீ) உலக அமைப்பிலும், பின்னர் ஒற்றைத் துருவ உலக அமைப்பிலும் வாழ்ந்து வருகிறோம். 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, நாம் பலதுருவ உலக அமைப்பு எனும் சகாப்தத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளோம். நல்ல அம்சம் என்னவென்றால், 500 ஆண்டுகால காலனியாதிக்கத்திற்குப் பின், உலகப் பொருளாதாரத்தின் முன்னணி படையாக ஆசிய பொருளாதாரம் உள்ளது.

ஆசியாவில் வளர்ச்சியின் இயந்திரமாகச் சீனப் பொருளாதாரம் இருந்து வருகிறது. மோசமான அம்சம் என்னவென்றால், பொருளாதார சக்திகளின் சமன்பாடு மற்றும் சர்வதேச பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுள்ள உலகளாவிய மாற்றங்களால் நலிவுற்று வருகிற ஏகாதிபத்தியம், தெற்குலக பகுதியின் வளரும் நாடுகளின் மீது அதன் இறுதிக்கட்ட தாக்குதலைத் தொடுத்து வருகிறது.

அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் புவிசார்அரசியல் உத்தி மீதான பிரச்சனைகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் மேற்கொண்டுள்ள சீரான, உறுதிப்பாடுமிக்க கொள்கைநிலைக்காக இலங்கை மக்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு என்றென்றும் நன்றி பாராட்டுகிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலுக்கு இரையாகும் பலவீனமான நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இடதுசாரி ஒற்றுமை மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியைக் கட்டமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டு வருகிறது.

சிறப்புமிக்க இம்மாநாட்டில் பங்கேற்க எங்கள் கட்சிக்கு அழைப்பு விடுத்தமைக்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 29

## கட்சிப் பேராய முடிவுகளை நிறைவேற்றுவோம்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது கட்சிப் பேராயம், ஆந்திர மாநிலம் விஜயவாடாவில், 2022 அக்டோபர் 14 முதல் 18 வரை ஐந்து நாட்கள் நடந்து முடிந்துள்ளது.

முன்னதாக மாநில, மாவட்ட, இடைக்குழு, கிளை மாநாடுகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. எந்த மாநாட்டிலும் எந்த பொறுப்புக்கும் தோழர்கள் போட்டியிட்டு, ரகசிய வாக்கெடுப்பும் கோர முடியும் என உட்கட்சி ஜனநாயகத்தை, கட்சிஅமைப்பு விதி தாங்கி நிற்கிறது. அவ்வாறு பல நிலைகளிலும் வாக்கெடுப்பு மூலம் குழுக்களும், பொறுப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இடைக்குழு, மாவட்ட, மாநில, அகில இந்திய செயலாளராக ஒரு தோழர் எத்தனை முறை பொறுப்பு வகிக்கலாம் என எல்லை இருந்தது. இந்த மாநாட்டில், பொறுப்புகளுக்கு தேர்வு செய்யப்படும் தோழர்களுக்கு தேசியக்குழு வயது நிர்ண யித்து வழிகாட்டுதலை தந்தது. கட்சிக் கிளைச் செயலாளர் 45 வயதுக்குள்ளும், மாவட்ட செயலாளர் 65 வயதுக்குள்ளும், மாநில மற்றும் அகில இந்திய பொதுச் செயலாளர் 75 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும் என்ற அந்த வழிகாட்டுதல், முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக புதியவர்கள், இளைஞர்கள் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். தமிழ்நாடு மாநில நிர்வாக குழுவில் 31 பேரில் 15 பேர் புதியவர்கள். ஏறத்தாழ சரி பாதி மாற்றப்பட்டிருப்பது இதற்கு முன்பு நிகழ்ந்தது இல்லை. இப்போதும் நன்கு செயல்படும் மூத்த தோழர்கள், அமைப்பு நிலை பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

‘அனைத்து அமைப்பு நிலை பொறுப்புகளில் இருந்தும் நான் விடுவித்துக் கொண்டேன். ஆனால் எனது இறுதி மூச்சு வரை கம்யூனிஸ்ட் ஆக செயல்படுவேன்’ என முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி மாநாட்டு நிறைவில் முழங்கினார்.

கட்சிப் பேராயத்தில் பங்கேற்ற 809 பிரதிநிதிகளில் 338 பேர் 40 வயதிற்கும் 60 வயதிற்கும் இடையில் உள்ளவர்கள். இந்த மாநாட்டில் புதிய வயது முறை செயல்படுத்தப்பட்டு இருப்பதன் விளைவாக அடுத்த கட்சிப் பேராயத்தில் பிரதிநிதிகள் சராசரி வயது பெருமளவு குறையும்.

சில கட்சிப் பேராயங்களுக்குப் பிறகு, இந்த முறை 17 வெளிநாட்டு கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கியூபா, வியட்நாம், ரஷ்யா ஆகிய நாட்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் பேச வந்த போது பெரும் ஆரவாரம் எழுப்பி பிரதிநிதிகள் வரவேற்றார்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்து மடலும் படிக்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் எச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் திபங்கர் பட்டாச்சாரியா, பார்வர்ட் பிளாக் கட்சியின் தலைவர் தேவராஜன் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினார்கள்.

இந்தியாவில் வளர்ந்து வரும் வகுப்புவாத அபாய சூழலில், இடதுசாரிகள், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள், ஒன்றுபட்டு செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினார்கள். தொழிற்சங்கங்கள் இயல்பாக இணைந்து வேலை செய்வதைப் போலவே, இளைஞர், மாணவர், பெண்கள் உள்ளிட்ட அனைத்து வெகுமக்கள் அரங்கங்களும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முன் வைத்தார்கள்.

அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமை இந்த கணத்தின் இன்றியமையாத தேவை என்பதை உணர்ச்சிகரமாக முன் வைத்துப் பேசிய போது மாநாடு பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றது.


இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பேராயத்தின் அரசியல் அறிக்கை பொதுமாநாட்டிலும், தனிக் குழுவிலும் விவாதிக்கப்பட்டு, செழுமைப்படுத்தப்பட்டது. கட்சியின் அமைப்பு விதிகளிலும் மாநாடு காலத்துக்கேற்ற திருத்தங்களை மேற்கொண்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலிமைப்படுத்த வேண்டும், இடதுசாரி ஒற்றுமையை மேலும் உறுதியாக ஒன்றிணைக்க வேண்டும், இந்தியாவில் முற்போக்கு சக்திகளின் விரிவான கூட்டு அமைப்பை உருவாக்கி ஆர்எஸ்எஸ்பிஜேபியை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும், இந்திய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மீது வெகுஜன போராட்டங்களை ஆழப்படுத்தி வெற்றிகரமாக நடத்தி இந்தியாவை சோசலிச நாடாக மாற்றுவது என்ற புரட்சிகர முடிவை நோக்கி முன்னேற வேண்டும் என்று கட்சி பேராயம் அறைகூவி அழைத்திருக்கிறது.

முடிவுகளை நிறைவேற்றுவோம்!

## மாநாட்டில் வாழ்த்திப் பேசிய இடதுசாரிக் கட்சித் தலைவர்கள்


சீதாராம் யெச்சூரி
மார்க்சிஸ்ட் கட்சி


தீபங்கர் பட்டாச்சாரியா
சிபிஐ (எம்.எல்)


ஜி.தேவராஜன்
அ,இ.பார்வர்ட் பிளாக்




2ம் பக்கத் தொடர்ச்சி

ஆழ்த்தியுள்ளது.

நம் நாடு பெரிய நாடு, மக்கள் தொகையில் உலகில் முதலிடத்திலுள்ள சீனாவிற்கு அடுத்த நிலையில் நமது நாடு உள்ளது.

ஏறத்தாழ 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில், அனைவரும் ஒரு மதத்தை, ஒரு மொழியை, ஒரு கடவுளை, ஒரு சாதியைக் கொண்டவர்கள் அல்ல.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பவுத்தம் என பல மதங்களையும் – மதத்திற்கு ஏற்ப பண்டிகைகளும், வழிபாடுகளும் உள்ளது.

4,600 க்கும் மேற்பட்ட சாதிகள் உள்ளன. சாதிகளில் ஏற்ற இறக்கம், மேல் கீழ் என்கிற வேறுபாடுகளும், இழிநிலைகளும் எழுதி மாளாத அளவிற்கு உள்ளது என்பதனையும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அனுபவித்துக் கொண்டுள்ளோம்.

மத நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, சாதி நம்பிக்கைகளுடன் நமது மக்கள் நிற்கவில்லை. ஏராளமான மூட நம்பிக்கை, பழக்க வழக்கங்களும் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. நம்மை அலைக்கழிப்பது மட்டுமல்ல, விலைமதிக்க முடியாத உயிர்களையும் பழிவாங்குகிறது.

இங்கே பிழைப்பிற்கு வழியில்லை என்று பிற மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் பிழைப்பு தேடி புலம் பெயர்ந்து செல்பவர்களின் வாழ்க்கை எவ்வாறு உள்ளது? என்பதனை நாம் அறியாதவர்கள் அல்ல.

கொடிய கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்த மக்கள் பட்ட துன்ப, துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்று முதல் முழு ஊரடங்குச் என்று அறிவித்த பிரதமர் மோடி, இதனால் மக்களுக்கு ஏற்படும் துன்பம் – துயரம் குறித்து சிறிதும் கவலைப்பட்டவர் அல்ல.

பிழைப்பிற்காக, ஒரு சாண் வயிறு நிரம்ப வேண்டும் என்பதற்காக மாநிலம் விட்டு பிற மாநிலம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களை எவ்வித பாதுகாப்பும் இல்லாமல், நடந்தே தங்களின் சொந்த கிராமங்களுக்கு, பல நாட்கள் பட்டினியுடன் செல்லவேண்டிய, துயரம் நிறைந்த நிலைமை, இவ்வாறு சென்றவர்களில் பலர் உயிர் இழக்க வேண்டிய துயரமும் ஏற்பட்டது.

தமிழகத்தை சேர்ந்த ரோஸ்லின் மற்றும் பத்மா ஆகிய இரு பெண்கள் பிழைப்பிற்காக கேரள மாநிலம் சென்று, சாலையோரங்களில் லாட்டரி சீட்டு விற்று வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர்.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் இந்தனூரில் பாரம்பரிய மருத்துவராக இருப்பவர் பகவல் சிங் – அவரது மனைவி லைலா. இத் தம்பதியர்களுக்கு ஆசை மூட்டி, செல்வம் பெருக நரபலி கொடுத்தால், வேண்டிய செல்வங்கள் மழைபோல் குவியும், நரபலி கொடுக்க, தானே பெண்களை அழைத்து வருகிறேன் என்று சாமியார் கூறியதை நம்பி, இசைவு தெரிவித்து பணமும் வழங்கியுள்ளனர்.

மோசடி சாமியார் தனது காரிலேயே இரு பெண்களையும், அழைத்துச் சென்று இருவரையும் படுகொலை செய்து, கண்டம் துண்டமாக வெட்டிப் புதைத்தது மட்டுமல்ல, மாமிசத்தை சமைத்தும் சாப்பிட்டுள்ளனர்.

எத்தகைய கொடுமை – நெஞ்சம் பதைபதைக்கும் கொடுஞ்செயல் செய்துள்ளனர்.

மக்களிடம் காணும் மூட பழக்க வழக்கத்தை சாமியார்கள் கூட்டம் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, தங்களது பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள மனிதர்களை பலி கொடுக்கும் கொடூரம் நடைபெறுகின்றது.

இதேபோன்று தர்மபுரி மாவட்டத்தில் புதையல் இருப்பதாக சாமியார் கூறியதை நம்பி நண்பனை நரபலி கொடுத்திட்ட கொடூரமும் அண்மையில் நடைபெற்றுள்ளது.


நாம் சமூக, பொருளாதார விடுதலைக்காக போராடி வெற்றிகளை பெற்று வருகின்றோம். சமூகக் கொடுமைகளை சமரசம் இன்றி எதிர்த்துப் போராடி சாதனை படைத்துள்ளோம்.

பொருளாதார, சமூகக் கோரிக்கைகளுக்காக போராடி வெற்றி பெற்றுள்ளோம். இவை இரண்டிற்குமான போராட்டங்கள் தொடர வேண்டும். தீவிரப்படுத்திட வேண்டும்.

இவை மட்டுமல்ல, மூடநம்பிக்கை பழக்க, வழக்கங்களுக்கு எதிரான விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்திட நாம் இடையறாது பணியாற்றிட வேண்டிய அவசியம் உள்ளதையும் மேற்கண்ட நரபலி சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

மக்களிடத்தில் ஏற்படும் விழிப்புணர்வால் மூடநம்பிக்கை, பழக்க வழக்கங்கள் மட்டுமல்ல– இதனை தூண்டுகின்ற சாமியார்கள் கூட்டம் மட்டுமல்ல – இவைகள் நீடித்தால்தான் தங்களின் அரசியல் பிழைப்பு நடக்கும் என்று செயல்பட்டு கொண்டுள்ள பிற்போக்கு அரசியல்வாதிகளுக்கும் முடிவுகட்ட முடியும் என்பதனை நாம் கருத்தில் கொண்டு களமிறங்குவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க



இரா. முத்தரசன்



எஸ்.தோதாத்ரி

# சாதி ஒரு மார்க்சியப் பார்வை



**சாதி பற்றி பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நிறம்தான் சாதிக்கு காரணம் என்பது ஒரு கருத்து. பிராமணர்கள்தான் சாதியைப் புகுத்தி விட்டார்கள் என்பது ஒரு கருத்து. மனு நீதிதான் சாதிக்கு காரணம் என்பது ஒரு கருத்து. பிரம்மன் படைக்கும் போதே நான்கு சாதிகளைப் படைத்துவிட்டான் என்பது ஒரு கருத்து. இதன் அடிப்படையில் சாதியைக் காண்பவர்கள் உண்டு. மற்ற எல்லா நாடுகளையும் விட இந்தியாவில் இது தீவிரமாகவே உள்ளது.**

பிற நாடுகளில் சமுதாயப் பிரிவினைகள் உண்டா? என்று கேட்டால் உண்டு என்று கூறலாம். உதாரணமாக ஏங்கல்ஸ் அவருடைய ஜெர்மனியில் ‘‘விவசாயிகள் போராட்டம்‘‘ என்ற நூலில் பல சமூகப் பிரிவுகளைக் காட்டுகிறார்.

ஜெர்மனியில் அரசர்கள், மதகுருமார்கள் ஆகியோர் ஒரு பிரிவாக இருந்தனர். இவர்கள் மற்றவர்களை கீழாகவே பார்த்தனர்.

பெரிய பிரபுக்கள், சிறிய பிரபுக்கள் என்ற பிரிவினர் இருந்தனர். இவர்கள் மற்றவர்களை கீழாகவே பார்த்தனர். இவர்கள் நடுத்தர மக்களுடன் உறவு கொள்வதில்லை.

பூர்ஷ்வாக்கள் (மத்திய தர வர்க்கத்தினர்) பெரும் பிரிவாக இருந்தனர். பாட்டாளிகள் மற்றொரு பிரிவாக இருந்தனர். விவசாயப் பாட்டாளிகள் மற்றொரு பிரிவாக இருந்தனர். இவர்களுக்கு உள்ளே மண உறவுகள் கிடையாது.

பிரான்ஸ் தேசத்தில் எஸ்டேட்டுகள் என்பன இருந்தன. முதல் எஸ்டேட் அரசன், மதகுருமார்கள் ஆகியோரைக் கொண்டதாகும். இரண்டாவது எஸ்டேட் பிரபுக்களைக் கொண்டதாகும். மூன்றாவது எஸ்டேட் பூர்ஷ்வாக்களைக் கொண்டதாகும். நான்காவது எஸ்டேட் என்பது பாட்டாளிகளைக் கொண்டதாகும். இவர்களுக்கு உள்ளே மண உறவுகள் கிடையாது.

இதே போன்ற அமைப்பு இங்கிலாந்திலும் இருந்தது. இவற்றைக் கூர்மையாக கவனித்தால் இது நமது வர்ண தர்ம முறையைப் போன்று இருப்பதைக் காண முடியும். ஆனால் இந்த இரண்டிற்கும் பல வேறுபாடுகள் உள்ளன.

இந்தச் சூழலில் எந்த நாடாக இருந்தாலும் இந்தப் பிரிவினைகள் எவ்வாறு வந்தன என்பதைக் காண வேண்டும். இதற்கு மார்க்ஸ் கூறும் வேலைப் பிரிவினை என்பதை நாம் ஒரு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். இது நமது சாதிய தோற்றத்தை புரிந்து கொள்ள பெரிய உதவியாக இருக்கும்.

மார்க்ஸ் தனது மூலதனத்திலும், வேறு பல நூல்களிலும் வேலைப் பிரிவினை பற்றி பேசியுள்ளார். மார்க்ஸ தவிர அவரது சமகால பூர்ஷ்வா அறிஞர்களும் இது பற்றிப் பேசியுள்ளனர். இவர்களில் வேலைப் பிரிவினையின் தன்மை பற்றி விவரமாக பேசியவர்கள் மார்க்சும், எங்கெல்சும் ஆவர்.

மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி பேசும் போது, இதனை ஒரு தனிப்பட்ட உற்பத்தி முறையாகக் காண்கிறார். இது நிலவுடமை முறையின் ஒருவகை என்ற நிலையில் காணப்படுகிறது. இதனை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதன் விளைவுதான் இந்திய சாதி முறை ஆகும்.

இந்த முறை உருவாவதற்கு இந்திய சூழல் வசதியாக இருந்தது. மார்க்சியம் மனிதனது இருப்பை தீர்மானிக்கும் விஷயங்களில் முதலிடம் கொடுப்பது உற்பத்தி முறைக்கு ஆகும். அதற்கு அடுத்தபடியாக உள்ளது பூகோள சூழ்நிலையாகும். முதலாவது செயற்கையானது; இரண்டாவது இயற்கையானது. இந்த இரண்டில் அதிக சக்தி வாய்ந்தது உற்பத்தி உறவுகளும், முறைகளும் ஆகும். இவைதாம் மனித சமுதாயத்தை விலங்கு நிலையில் இருந்து பிரித்துக் காட்டுகின்றன. இந்த முறை இல்லாவிட்டால், மனிதனும் ஒரு விலங்காகவே தான் வாழ்ந்து கொண்டிருப்பான்.

அப்பொழுது சாதியும் கிடையாது; சமயமும் கிடையாது; தத்துவமும் கிடையாது. ஆனால் பொருள் உற்பத்தியில் ஈடுபட்ட பின்னர் மேற்கூறியவை தோன்றிவிடுகின்றன. அந்தந்த நாட்டின் சூழலுக்கு ஏற்ப இவை வெவ்வேறு விதமாக இடம்பெறுகின்றன.

இந்திய சாதிய முறையானது ஆதிகாலத்தில் இல்லை. உதாரணமாக ரிக்வேத காலத்தில் சாதியம் இல்லை. காரணம், அப்பொழுது ஆரியர்கள் இனக்குழு மக்களாகவே இருந்தனர். எல்லோரும் கூட்டாகவே வேலை செய்தனர். கூட்டாகவே உணவைப் பகிர்ந்து உண்டனர். இதற்கு ஒரு உதாரணம் காட்டலாம்.

மகாபாரதத்தில் ஒரு சிறு கதை இடம்பெறுகிறது. காட்டில் வசிக்கும் பொழுது குந்தி தனது மகன்கள் பல இடங்களுக்குச் சென்று உணவினைக் கொண்டுவந்த பின்னர், பஞ்ச பாண்டவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறாள். இதில் பீமனுக்கு சற்று அதிகமாகவும், மற்றவர்களுக்குச் சற்றுக் குறைவாகவும் உணவு கிடைத்தன. அதற்காக சண்டை வரவில்லை. இது தாய்வழி சமுதாயத்தில் பெண் பெற்றிருந்த இடத்தைக் காட்டுகிறது.

இது போன்ற நிகழ்வுகள் பலவற்றை ரிக் வேத பாடல்களில் காணலாம். இது இந்தியாவில் ஒரு காலத்தில் எல்லா இடங்களிலும் இருந்தன. உதாரணமாக, மணிமேகலை அட்சயப் பாத்திரத்தின் உதவியால் எல்லோருக்கும் உணவைப் பகிர்ந்து கொடுக்கிறாள். இதனை தற்காலக் கண்ணோட்டத்தில் கண்டு ஈகை, வள்ளல் தன்மை என அறியலாம்.

ஆனால் இது என்றோ ஒரு காலத்தில் நாகர்களிடையே இருந்த உணவுப் பகிர்வு முறையின் எச்சமாக உள்ளது. மணிமேகலையை தாய்வழி சமுதாயத்தின் தொடர்ச்சியாகக் கூட காணலாம். சாத்தனார் பழைமை மரபு ஒன்றை அவரது காப்பியத்தில் பயன்படுத்தியுள்ளார் என்றே நாம் கொள்ள வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் பிரிவுகள் எதுவும் இல்லை என்று கூறலாம். இது மகாபாரதம், மணிமேகலை ஆகியவற்றிற்கு முந்திய காலகட்டமாகும். ஆனால், பழைய இனக்குழு அமைப்பு அப்படியே இருக்கவில்லை. அதில் படிப்படியாக வேலைப் பிரிவினைகள் தோன்றின. இனக்குழு மக்களிடையே சற்று திறமை வாய்ந்தவர்கள் அறிவு சம்பந்தமான வேலைகளில் இறங்கினர்.

அதாவது வேட்டைக்குச் செல்வதற்கு முன்னர் சில பருவ நிலைகளைக் கண்டு, இன்று வேட்டை கிடைக்கும்; கிடைக்காது என்று கூறினர். இத்தகையவர்கள் படிப்படியாக அறிவு உழைப்பாளிகளாக மாறினர். இவர்கள் ஒரு பிரிவாக மாறினர். அறிவு உை

இதேபோன்று பெண்கள் சில வேலைகளையும், சற்று கடினமான வேலைகளை ஆண்களும் செய்தனர். இது ஆண்களுக்கும், பெண்களுக்குமான வேலைப் பிரிவினையாக மாற்றம் பெற்றது. இந்தப் பிரிவினையானது சமுதாயம் வளர்ச்சி பெறும் பொழுது அதிகரித்தது. சமூகத் தேவைக்கு ஏற்ப இவை அமைந்தன.

இனக்குழு அமைப்பிலிருந்து விவசாய அமைப்பிற்கு சமுதாயம் மாறும் பொழுது பிரிவினைகள் அதிகரித்ததை இப்பொழுது வர்க்கமற்ற சமுதாயம், வர்க்கபேதமுள்ள சமுதாயமாக மாறியது. இந்தக் கட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன. இது தமிழகத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இடம் பெற்றது. ஏறத்தாழ இந்தக் கட்டத்தில் வாழ்ந்த வள்ளுவர் தனது குறளில் ‘‘சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்’’ என்று கூறுகிறார்.

இந்திய அரங்கில் இந்த வேலைப் பிரிவினையை இரு வேறு கண்ணோட்டத்திற்குள் காண வேண்டும். ஏனென்றால் இது மற்ற நாடுகளில் இல்லாத ஒரு சிறப்பு தன்மை உள்ளதாக மாறியது. இதற்கு முதற்காரணம் இங்கு உள்ள பூகோள சூழல். இங்கு நிறைய வளங்கள் உள்ள பகுதிகள் அதிகம். ஒவ்வொரு கிராமத்திலும் தேவையான பொருள்கள் அனைத்தும் கிடைத்தன. அந்தக் காலத்தில் உள்ள உழைப்பிற்கு ஏற்ற பொருள்கள் எல்லாமே கிடைத்தன.

எனவே எல்லாமே கிராமத்தில் இருந்தன. இதன் காரணமாக கிராமத்தை விட்டு வெளியே செல்லும் தேவை மிகக் குறைவாகவே இருந்தது. வணிகர்கள் தவிர மற்றவர்கள் வெளியே செல்வதில்லை. இதன் விளைவாக கிராமத்தின் சமூகத்திற்குத் தேவையான உழைப்பே போதுமானதாக இருந்தது. இது ஒரு தேக்க நிலையை உருவாக்கியது. இந்த சமூக உழைப்பிற்கு தேவையான கருவிகள் மட்டுமே தயாரிக்கப்பட்டன. புதுக் கருவிகளுக்கு இடமில்லாமலேயே இருந்தது. இந்த நிலை காரணமாக ஒவ்வொருவரும் அவரவர்கள் வேலையை தலைமுறை தலைமுறையாக செய்தனர்.

ஒவ்வொரு தொழில் பிரிவினரும், தனித்தனி குழுவாகவே இருந்தனர். ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் பிராமணர்கள் ஒரு பிரிவாகவும், வேளாளர்கள் ஒரு பிரிவாகவும், பஞ்ச கம்மாளர்கள் தனித்தனி பிரிவாகவும் செயல்பட்டனர். மேலும் தங்களது தொழில் ரகசியத்தை பாதுகாக்க வேண்டி, அகமணமுறையை மேற்கொண்டனர். இதன் விளைவாக ஒவ்வொரு குழுவும் தனித்து இருந்தனர்.

இது மேல் நாட்டில் இல்லாத ஒன்று. அதற்குக் காரணம், அங்கு வளங்கள் குறைவு. அதன் விளைவாக இடப்பெயர்ச்சி அதிகம். எனவே அங்கு குழுவாக நிலைத்து ஒரு இடத்தில் இருக்க முடியவில்லை. அங்கு தொழில் வேறுபாடு இருந்தாலும், இங்கு போல் இறுக்கமாக இல்லை.

நமது சூழலில் இது காலம் செல்லச் செல்ல கெட்டி தட்டி போய் இறுக்கமடைந்து நிலைத்த ஒன்றாக உருவாயிற்று. மாறுதல் நிகழ்ந்தன, அவை மெதுவாகவே இடம்பெற்றன. இது ஒரே வேலையை திரும்பத் திரும்ப செய்வதன் காரணமாக, அதன் மூலம் சமுதாயத் தேவை பூர்த்தி பெற்றது. அதன் காரணமாக அதற்கு மேல் உற்பத்தி செல்லவில்லை.

இது இங்கு சாதியம் என்ற முறையாகத் தோன்றியது. இது அடிப்படைத் தொடர்பானது. தொழிற் பிரிவு தொடர்பானது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இதற்கு மேலாக உள்ள கட்டுமானம் சிந்தனை உலகில் பிரதிபலித்தது. இந்தத் தொழில் பிரிவினையானது அன்றைய சமுதாயம் இயங்குவதற்கு வசதியாக இருந்தபடியால், அதிலுள்ள அடுக்கு முறைகள் நியாயப்படுத்தப்பட்டன. இது அந்தக் காலத்தில் தோன்றிய நீதி நூல்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன. இந்த நூல்களின் சொந்தக்காரர்கள் அடித்தள மக்கள் அல்லர். இவர்கள் மேல் மட்டத்தினர். இவர்களில் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகியோர் இருந்தனர். இவர்கள் சாதிய முறையில் உள்ள பழக்கங்களை வழக்கமாக மாற்றினர். இந்த

தொடர்ச்சி 11ம் பக்கம்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடுகள்

# புகைப்பட ஆவணம்


சிபிஐ முதலாவது கட்சி மாநாடு, பாம்பே – 1943


சிபிஐ 2வது கட்சி மாநாடு, கல்கத்தா – 1948


3வது கட்சி மாநாடு, மதுரை, 1953 – 54


4வது கட்சி மாநாடு, பாலக்காட் – 1956


5வது கட்சி மாநாடு, அமிர்தசரஸ் – 1958


6-வது கட்சி மாநாடு, விஜயவாடா – 1961


7-வது கட்சி மாநாடு, பாம்பே – 1964


8-வது கட்சி மாநாடு, பாட்னா – 1968


9-வது கட்சி மாநாடு, கொச்சி-1971



10-வது கட்சி மாநாடு, விஜயவாடா-1975


11வது கட்சி மாநாடு, பட்டிண்டா-1978


12வது கட்சி மாநாடு, வாரணாசி – 1982


13வது கட்சி மாநாடு, பாட்னா-1986



14வது கட்சி மாநாடு, கல்கத்தா – 1989



15வது கட்சி மாநாடு, ஹைதராபாத் – 1992



16வது கட்சி மாநாடு, புதுடெல்லி-1995



17வது கட்சி மாநாடு, சென்னை - 1998



18வது கட்சி மாநாடு, திருவனந்தபுரம் - 2002




19வது கட்சி மாநாடு, சண்டிகார் - 2005




20வது கட்சி மாநாடு, ஹைதராபாத் - 2008



21வது கட்சி மாநாடு, பாட்னா - 2012



22வது கட்சி மாநாடு, புதுச்சேரி - 2015



23வது கட்சி மாநாடு, கொல்லம் - 2018



24வது கட்சி மாநாடு, விஜயவாடா - 2022



மாநாட்டுப் பேரணியில் 2 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பேனரை ஏந்திச் செல்லும் சீருடை அணிந்த பெண்கள்



அனில் ராஜிம்வாலே

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில

# ஒரு வரலாற்றுப்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925ல் கான்பூரில் நிறுவப்பட்டது. அதிலிருந்து கட்சி நடத்திய பல்வேறு மாநாடுகள் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்படும் பேராயங்கள் கட்சியின் அரசியல், தத்துவக் கோட்பாடு மற்றும் செயல்திட்ட நிலைபாடுகளைத் தீட்டி, முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

முதலில் குறிப்பிடத்தக்க ஒன்று, தேசியக் காங்கிரஸ் கட்சியின் அகமதாபாத் அமர்வில் (1921) இந்தியாவுக்கு "அனைத்து அன்னியக் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை என்னும் "பூரண சுயராஜ்யம்'' என்ற தீர்மானத்தை முதன் முதலாக முன்மொழிந்தது கம்யூனிஸ்டான மௌலானா ஹஸ்ரத் மொகானி. ஆனால் அத்தீர்மானம் வாக்கெடுப்பில் தோற்றது.

### சிபிஐ அமைப்பு மாநாடு, கான்பூர் - 1925

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கான்பூர் அமைப்பு மாநாடு 1925 டிசம்பர் 25 முதல் 29 வரை நடைபெற்றது. மாநாட்டின் அமைப்பாளரான சத்தியபக்தா, 1925 ஜூன் 18ம் தேதியிட்ட அவரது சுற்றறிக்கை கடிதத்தில், "கம்யூனிஸ்ட் கட்சியின் இறுதி லட்சியம், 'இந்தியாவில் முழுமையான சுதந்திர'த்தை ஏற்படுத்துவது, அதன் விளைவாய் நியாயமான ஒரு சமூகத்தை அமைப்பது" என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

கான்பூரில் கம்யூனிஸ்ட்களின் மாநாட்டின் தலைவரான ம.சிங்காரவேலர் தனது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "ஞ்கட்சியின் உடனடி லட்சியம், முழுமையான விடுதலையை அனைத்து நியாயமான வழிகளிலும் நிறுவுவதே." மொஹானியும் சிங்காரவேலரும் தங்கள் உரைகளில் தொடர்ச்சியாக 'சுயராஜ்' என்பது முழுமையான விடுதலை என உறுதியாக விளக்கமளித்தனர்.

கான்பூர் மாநாட்டில் ஏற்கப்பட்ட அமைப்பு விதி ஷரத்து 1, "பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மேலாதிக்கத்திலிருந்து இந்தியாவின் விடுதலை"யைக் கட்சியின் லட்சியங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியது. மேலும் கட்சி உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இருக்கலாம் என மாநாடு முடிவுசெய்தது. கான்பூர் அமைப்பு மாநாடு எஸ்.வி.காட்டே மற்றும் ஜெ.பி.பஹர்ஹட்டா இருவரையும் பொதுச் செயலாளர்களாகவும், சிங்காரவேலரைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தது.

### சிபிஐயின் விரிவடைந்த சிஇசி கூட்டம், பாம்பே - 1927

பாம்பேயில் 1927 மே 29 முதல் 31வரை நடைபெற்ற கட்சியின் விரிவடைந்த மத்திய செயற்குழு (சிஇசி) கூட்டம் கட்சியின் அமைப்புச் சட்டம் மற்றும் செயல்திட்டத்தை மாற்றியமைத்தது. சிபிஐ அமைப்பு விதி, 'ப்ரோகிராம்' பிரிவு பத்தி 6, கட்சியின் லட்சியத்தை, "முழுமையான தேசிய விடுதலை மற்றும் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை அடிப்படையில் ஜனநாயகக் குடியரசை நிர்மாணிப்பது" என்று மேம்படுத்தி மாற்றியமைத்தது.

அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியில் அதனது இடதுசாரி அணியின் ஒத்துழைப்புடன் குடியரசு அணியை அமைப்பதைக் கம்யூனிஸ்ட்கள் லட்சியமாகக் கொண்டனர். சிஇசி கூட்டம் எஸ்.வி.காட்டேவைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது.

### கல்கத்தா மாநாடு - 1933

1933ல் மீரட் கைதிகள் விடுதலைக்குப் பிறகு, சிபிஐயின் சிறிய மாநாடு கல்கத்தாவில் 1933 டிசம்பரில் நடைபெற்றது; அதில் அரசியல் தீர்மானம், கட்சியின் புதிய அமைப்பு விதி ஏற்கப்பட்டு, டாக்டர் ஜி.அதிகாரியைப் பொதுச் செயலாளராகக் கொண்ட புதிய மத்திய குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்ட பிறகு, எஸ்.எஸ்.மிராஜ்கர் பொதுச் செயலாளராகச் செயல்பட்டார். சில காலத்திற்குப் பிறகு அவர் மாற்றப்பட்டு சோமநாத் லாகிரி பொதுச் செயலாளரானார். அம்மாநாடு இந்தியாவின் விடுதலையை வென்றடைய வற்புறுத்தியது.

### சிபிஐயும் - முழு விடுதலை காங்கிரஸால் ஏற்கப்பட்டதும்

முழு விடுதலையை லட்சியமாகத் தீர்மானிப்பதை நோக்கிய நடவடிக்கைகளில் இந்திய தேசியக் காங்கிரசின் மெட்ராஸ் (1927), கல்கத்தா (1928) மற்றும் லாகூர் (1929) அமர்வுகள் முக்கியமானவை: அதில் சிபிஐ மற்றும் கீறிறி (தொழிலாளர்கள் விவசாயிகள் கட்சி) கேந்திரமான முக்கிய பங்கு வகித்தன. 1927 மெட்ராஸ் அமர்வில் முழு விடுதலை குறித்த தீர்மானத்தைப் பொருளாய்வுக் குழுவில் கே.என்.ஜோக்லேக்கர் (சிபிஐ) முன்மொழிய, ஜவகர்லால் நேரு ஆதரித்தார். அத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பொது அரங்கில் முழு விடுதலைத் தீர்மானத்தை ஜவகர்லால் நேரு முன்மொழிய கே.என். ஜோக்லேக்கர் வழிமொழிந்தார். ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரசின் 1928 கல்கத்தா அமர்வில் சிபிஐ மற்றும் தொழிலாளர் விவசாயக் கட்சி தலைமையில் 50ஆயிரம் மக்கள் பங்கேற்க மாபெரும் பேரணி காங்கிரஸ் அமர்வு நடைபெறும் பந்தலுக்குள், காங்கிரஸ் தலைவர் மோதிலால் நேரு அனுமதியுடன் நுழைந்தது. முழு விடுதலையை ஆதரித்து நடத்தப்பட்ட பேரணியில் ஜோக்லேக்கரும், ஜவகர்லால் நேருவும் உரையாற்றினர்.

அதன் விளைவாய், ஓராண்டிற்குள் முழு விடுதலை லட்சியத் தீர்மானத்தை ஏற்க காங்கிரஸ் முடிவு செய்தது; மேலும் 1929 டிசம்பர் 31 லாகூர் அமர்வில் அவ்வாறே செய்தது: காங்கிரஸ் அமைப்பு விதி ஷரத்து 1ல் உள்ள 'சுயராஜ்' என்ற வார்த்தைக்கு முழு விடுதலை என்றே பொருள்படும்ஞ்"

### பிசி ஜோஷி பொதுச் செயலாளராக - 1935


1935ல் பி.சி.ஜோஷி சிபிஐ பொதுச் செயலாளர் ஆக்கப்பட்டார். 'தேசிய முன்னணி' என்றழைக்கப்பட்ட பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியை அமைப்பதன் மூலம் முழு விடுதலை என்ற முழக்கங்களை அவர் மேலெடுத்துச் சென்றார்.

### சிபிஐ முதலாவது கட்சிக் காங்கிரஸ், பாம்பே - 1943

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது கட்சிக் காங்கிரஸ் (பேராயம்) 1943 மே 23 லிருந்து ஜூன் 1 வரை பாம்பேயில், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தீவிரமான அரசியல் போராட்டங்கள் நிகழ்ந்த சூழ்நிலையின் மத்தியில், தேசிய வாழ்வில் பெரும் நிகழ்வாக நடைபெற்றது. முக்கிய எதிரியாகிய உலகப் பாசிசத்தை எதிர்த்துப் போரிட முடிவு செய்தது. கட்சியின் மீதான தடை நீக்கப்பட்டது. நாடு முழுவதுமிருந்து 139 பிரதிநிதிகள் பங்கேற்றனர். தேசிய முன்னணி மற்றும் தேசியப் பாதுகாப்பிற்காகத் தேசிய அரசு குறித்து விவாதித்து 'மக்களின் யுத்தம்' என்ற முழக்கத்தைத் தந்தது.

அதன் முக்கிய அம்சம் பாசிச எதிர்ப்பு முன்னணியை அமைப்பது. அந்நேரத்தில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 5ஆயிரத்திலிருந்து 15,000மாக உயர்ந்தது. 1931ன் அமைப்பு விதியை 1943 அமைப்பு விதி மாற்றியமைத்தது. அப்பொழுது கட்சி ஒரு தேசிய சக்தியாக மாறி, பெருந்திரள் மக்களின் கட்சியாக உருவாகும் பாதையில் இருந்தது. கட்சி அமைப்பு விதி, இந்தியாவின் சுதந்திரத்தை விரும்பும் அனைத்து மக்களின், தேசிய ஐக்கிய முன்னணி கட்டியமைக்கும் கடமை பொறுப்பை வலியுறுத்தியது.

சிபிஐயின் இலச்சினை சின்னம், ஐந்து கூர் முனைகள் உள்ள சிகப்பு நட்சத்திரம், அதன் மத்தியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்று வட்டமாகப் பொறிக்கப்பட்ட எழுத்துகளுடன் குறுக்காக அமைந்த சுத்தியல் அரிவாள்




என்பதாகும். இது பின்னர் சிகப்புப் பின்னணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்று வெள்ளை நிறத்தில் வட்ட வடிவிலான வார்த்தைகளுடன் வெள்ளை நிறத்தில் அரிவாள் சுத்தியல் குறுக்காக அமையுமாறு மாற்றப்பட்டது. பி.சி. ஜோஷி பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### இந்திய விடுதலையும் - சிபிஐ கட்சியும்


கடுமையான போராட்டங்களால் 1947 ஆகஸ்ட் 15ல் வென்றடைந்த இந்தியாவின் சுதந்திரத்தைப் பி.சி.ஜோஷி தலைமையிலான சிபிஐ மனப்பூர்வமாக மகிழ்ந்து வரவேற்றது, அதனைக் கொண்டாடும் வகையில் தொடர்ச்சியான கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும்




எஸ்.வி.காட்டே



பி.சி.ஜோஷி



பி.டி.ரணதிவே



அஜய் கோஷ்

# இந்திய மாநாடுகள் பார்வை

ஊர்வலங்களை நடத்தியது. சிபிஐயின் அதிகாரபூர்வ ஏடு ‘மக்களின் சகாப்தம்’ (பியூபிள்ஸ் ஏஜ்) தனது 1947 ஆகஸ்ட் 3 இதழில், “நூற்றாண்டுகளாக யூனியன் ஜாக் கொடி பறந்த இடத்தில், இந்தியாவின் தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்க உள்ளதுஞ் இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தில் அது ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகப் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட உள்ளது” என்று எழுதியது.

பியூபிள்ஸ் ஏஜ் விடுதலை நாள் சிறப்பிதழை வெளியிட்டு, அதில் நாடு முழுவதும் நடந்த விழா கொண்டாட்டங்களில் சிபிஐயின் பங்கேற்பு குறித்த செய்திகளை விரிவாகத் தந்தது.

## சிபிஐ 2வது கட்சிக் காங்கிரஸ், கல்கத்தா – 1948

1947 டிசம்பரில் நடைபெற்ற மத்தியக் குழு கூட்டத்தில் ‘சீர்திருத்தவாதம்’ என்ற பெயரில் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி நீக்கப்பட்டு, பி.டி.ரணதிவே நியமிக்கப்பட்டார்;




அது ‘பிடிஆர்’ பாதை என்ற தற்கொலை சாகசத்திற்குக் கட்சியில் தொடக்கம் செய்தது. 1948 பிப்ரவரி, மார்ச்சில் கல்கத்தாவில் நடைபெற்ற 632 பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிபிஐ 2வது பேராயம் பி.டி. ரணதிவேவைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது.

இந்தியச் சுதந்திரத்தைப் ‘போலி’ என்றும், நேருவின் அரசை ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்ட் என்றும் வகைப்படுத்தியது. நேரு அரசை உடனடியாக ஆயுதப் போராட்டம் மூலம் தூக்கி எறிந்து, ‘சோஷலிசம்’ நோக்கி நகர்த்த அறைகூவல் விடுத்தது. 1948 மார்ச் 9ல் தேசம் தழுவிய காலவரையறையற்ற ரயில்வே வேலை நிறுத்தத்திற்கான அழைப்பு, புரட்சி வெடிக்கும் என்ற நம்பிக்கையில் விடுக்கப்பட்டது, ஆனால் அது முழுமையாகத் தோல்வியில் முடிந்தது.

ஹைதராபாத் நிஜாம் சமஸ்தானத்தின் தெலுங்கானா பகுதியில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம், அப்பகுதிக்குள் இந்திய இராணுவப்படைகள் 1948 செப்டம்பர் 13ல் நுழைந்த பிறகும், தொடர்ந்தது.

அதன் விளைவாய், சிபிஐ மற்றும் அதன் ஜனரஞ் சக அமைப்புகள் முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டு, சிதறின. 1948ன் தொடக்கத்தில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 89ஆயிரத்திற்கும் மேல் இருந்தது, 1950ன் இறுதியில் வெறும் 9,000 ஆகக் குறைந்தது! சாகசப் பாதை கட்சியை அழித்தது. பிடிஆர் நீக்கப்பட்டு, முதலில் சி.இராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராகவும், பின்னர் அஜாய் கோஷ் பொதுச் செயலாளராகவும் ஆக்கப்பட்டார்.

## சிபிஐ சிறப்பு மாநாடு, கல்கத்தா – 1951

தலைமறைவாக 1951 அக்டோபர் 9முதல் 15வரை நடைபெற்றது. புதிய, முறையான, கட்சி செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது. தலைமறைவு வாழ்வில் அஜாய் கோஷ், டாங்கே மற்றும் காட்டேவின் புனைப் பெயரின் தொடக்கமான ஆங்கில ‘றி’ என்ற எழுத்தில் அமைந்த அவர்களிடமிருந்து வந்த ‘3 றி’ கடிதத்தின் அடிப்படையில் அந்த மாற்றம் ஏற்கப்பட்டது; அவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப புதிய புரிதலைப் பின்பற்றி, கட்சித் திட்டங்களை மேம்படுத்தினர். ஆயுதப் போராட்டத்தைத் திரும்பப் பெற்று 1952 பொதுத் தேர்தல்களில் பங்கெடுக்க கட்சி முடிவு செய்தது.

கட்சித் திட்டம், “தொழிலாளர் வர்க்கம், வேளாண் குடிகள், உழைக்கும் கற்றறிவாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர் எனும் லட்சோப லட்சம் பாடுபடும் மக்கள் திரளையும், நாட்டின் விடுதலையில் ஆர்வம் உடைய தேசிய முதலாளிகளையும்” ஒன்றிணைத்து அதனை ஒரே ஜனநாயக முன்னணியாக மேம்படுத்த அழைப்பு விடுத்தது.

திட்டம் மேலும் கூறும்போது புரட்சியின் இந்தக் கட்டம், சோஷலிசப் புரட்சி அன்று; மாறாக அது ஜனநாயகப் புரட்சிக்கானது என்று வரையறுத்தது. மேலும் அது ‘கொள்கை அறிக்கை’ நிறைவேற்றியது. அஜாய் கோஷ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 3வது கட்சிக் காங்கிரஸ், மதுரை, 1953 – 54

1953 டிசம்பர் 27 முதல் 1954 ஜனவரி வரை தமிழகத்தின் மதுரையில் நடைபெற்ற 3வது கட்சிக் காங்கிரஸ், நேருவின் வெளிநாட்டுக் கொள்கையின் முற்போக்குத் தன்மையை அங்கீகரித்து அரசியல் தீர்மானம் நிறைவேற்றியது. நமது முக்கியமான கடமைப் பொறுப்பு, காங்கிரஸ் அரசை மாற்றுவது; அதனை முற்போக்குக் காங்கிரஸ்காரர்களை உள்ளடக்கிய ஒன்றாக மாற்றி அமைப்பதென அஜாய் கோஷ் விளக்கினார். பொதுச் செயலாளராக அஜாய் கோஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஜூன் 1955 தீர்மானம்

இந்த முக்கியமான ஆவணம் உத்திகள் மற்றும் தந்திரோபாய நிலைபாடுகளையும், நாடாளுமன்ற அமைப்புகளின் நேர்மறை பங்கையும் வரையறுத்தது. ஜனநாயக முன்னணியின் முக்கியத்துவத்தையும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையையும், உள்நாட்டில் பொதுத்துறை சார்பான கொள்கைகளையும் நேர்மறையாக மதிப்பிட்டு வலியுறுத்தியது.

மேலும், அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்துப் போரிடும்போது, வலதுசாரி பிற்போக்கு சக்திகள் அதிகாரத்திற்கு வந்துவிடாத வகையில் மிகக் கவனமாகக் கையாளவும் எச்சரித்தது. காங்கிரஸின் முற்போக்குப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக ஜனநாயக முன்னணி இருக்கும் என்றது.

## 4வது கட்சிக் காங்கிரஸ், பாலக்காட் – 1956

கட்சியின் அரசியல் மற்றும் தத்துவக் கோட்பாடுகளின் வரலாற்றில் ஒரு குணாம்ச ரீதியான திருப்பு முனை, பி.டி.ஆர். காலத்தின் சரிவுக்குப் பிறகு கட்சியை அரசியல் மைய நீரோட்டத்தில் இணைய உதவியது. கேரள மாநில பாலக்காட்டில் 1956 ஏப்ரல் 19முதல் 29வரை நடைபெற்றது. ஒரு லட்சத்து ஐயாயிரம் உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 407பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அஜாய் கோஷ், தேசிய, சர்வதேசிய நிலைகள் மற்றும் புதிய கடமை, பொறுப்புகளையும் வரலாற்றுச் சிறப்புமிக்க சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிறிஷிஹி) 20வது காங்கிரஸ் குறித்தும் அறிக்கை தந்து, புதிய உலக எதார்த்தங்கள் மற்றும் உத்திகள், தந்திரோபாயங்களில் மாற்றத்தின் தேவையை வலியுறுத்தினார். நாடாளுமன்ற அமைப்புகள் மற்றும் அமைதியான மாற்றத்தின் பங்கினை அடிக்கோடிட்டு வலியுறுத்தினார்.

கட்சிக் காங்கிரஸ் ஸ்டாலின் தலைமை வழிபாட்டை விமர்சனம் செய்தது; மேலும் அவரது பங்களிப்புக் குறித்துச் சமச்சீரான மதிப்பீடு தேவை என்றது.

பாலக்காட் காங்கிரஸ் மொழிவாரி மாநிலங்கள் சீரமைப்பை ஆதரித்தது. ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணியாக இருக்காது என அரசியல் தீர்மானம் தெளிவு படுத்தியது. “இந்தியச் சமூகத்தின் அடிப்படை முரண்பாடு, ஒரு பக்கம் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவமும் இருக்க, மறுபுறம் தேசிய நடுத்தர வர்க்க முதலாளிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கும் இடையிலான முரண்பாடாகும்” என்று விளக்கியது தீர்மானம். வலதுசாரி சக்திகளுக்கு எந்தவகையிலும் இடம் தரும் கேள்வியே எழவில்லை. அஜய் கோஷ் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 5வது கட்சிக் காங்கிரஸ், அமிர்தசரஸ் – 1958

கேரள மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற (1957) பின்னணியில், இது ஒரு மைல்கல். கட்சி அமைப்பு விதிகளில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி கட்சிக்கான புதிய அமைப்பு விதி நிறைவேற்றப்பட்டது. அதன் முக்கிய அம்சங்கள்:

1.‘பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்’ என்ற கோட்பாடு கைவிடப்பட்டது.

2. இந்தியாவில் எதிர்கால சோஷலிசத்தில் எதிர்க்கட்சிகளின் இருப்பை அங்கீகரிப்பது,

3. அமைதியான வழிகளில் முழு ஜனநாயகத்தையும் சோஷலிசத்தையும் வென்றெடுக்கச் சிபிஐ பாடுபடும் என அறிவிக்கிறது.

4. அனைத்து தேசபக்த மற்றும் ஜனநாயக சக்திகளையும் ஒன்றிணைத்துத் தேசிய விடுதலையைப் பாதுகாக்க உறுதி ஏற்கிறது.

5. தேசியமயமாக்கல் மற்றும் பொதுத் துறைகள் போன்ற நல்ல அம்சங்களை வலதுசாரி பிற்போக்குச் சக்திகள் தாக்குகின்றன என்பதைக் கட்சிப் பேராயம் சுட்டிக் காட்டுகிறது.

6. அமிர்தசரஸ் காங்கிரஸ் குறித்து விமர்சித்த இஎம்எஸ், ‘நியூ ஏஜ்’ இதழில் பின்வருமாறு எழுதினார்: “இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையில் தேசியம், ஜனநாயகம் மற்றும் மக்களுக்குச் சேவை என்ற செயல்திட்டத்தைப் பின்பற்றுகிறது; மேலும் அகிம்சை, ஒத்துழையாமை மற்றும் சுயராஜ் என்ற காந்திஜியின் உணர்வைப் பின்பற்றுகிறது”

7. கட்சி அமைப்பு விதிகள் ஸ்தாபனக் கட்டமைப்பில் முந்தைய இரண்டடுக்கு என்பதற்குப் பதிலாக மூன்று அடுக்கு கட்டமைப்பை ஏற்படுத்தத் தீர்மானம் நிறைவேற்றியது.


## 6-வது கட்சிக் காங்கிரஸ், விஜயவாடா – 1961

சர்வதேசிய மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் அழிவு தரும் மாவோயிசப் பிளவு நடவடிக்கைகளின் பின்னணியில் நடைபெற்றது, பல பிளவுகளுக்கு இட்டுச் சென்றது. 1961 ஏப்ரல் 7 முதல் 16வரை 1,77,501 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 439 பிரதிநிதிகள் பங்கேற்புடன் நடைபெற்றது. மாவோயிசத்தால் தூண்டிவிடப்பட்ட சீனப் பாதையைப் பின்பற்றியவர்கள் கட்சியைப் பிளவுபடுத்தும் தயாரிப்புகளில் ஈடுபட்டாலும், தக்க சமயத்தில் அஜாய் கோஷ் தலையீட்டால் காக்கப்பட்டது.

தொடர்ச்சி 10ம் பக்கம்


சி.ராஜேஷ்வரராவ்


இந்திரஜித் குப்தா


ஏ.பி. பரதன்


சுதாகர் ரெட்டி


டி.ராஜா

9ம் பக்கத் தொடர்ச்சி

கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையிலும் அவர் ஆற்றிய நீண்ட உரை ‘கட்சிப் பாதை’யாக நிறைவேற்றப்பட்டது. அந்த நேரத்திற்குப் பிளவு தவிர்க்கப்பட்டது.

### சீனா ஆக்கிரமிப்பு - 1962

தங்கள் சொந்த வாக்குறுதிக்கு மாறாக அதை மீறி, 1962 அக்டோபரில் சீனப்படைகள் இந்தியப் பிராந்தியத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்தது. சீன ஆக்கிரமிப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு (சிணிசி) ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படையாகக் கண்டித்தது; மேலும் தேசப் பாதுகாப்பிற்காக அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரித்தது.

### 7-வது கட்சிக் காங்கிரஸ், பாம்பே - 1964

கட்சிப் பிளவிற்குப் பிறகு நடந்த முதலாவது பேராயம், 1964 டிசம்பர் 13 முதல் 23 வரை நடைபெற்றது. பிளவு, கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சுட்டிக் காட்டியது. தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான புதிய செயல்திட்டத்தை நிறைவேற்றியது. மாவோயிசம் மற்றும் சீன ஆக்கிரமிப்பைச் கண்டித்தது. சி.இராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 8-வது கட்சிக் காங்கிரஸ், பாட்னா - 1968

1968 பிப்ரவரி 7 முதல் 15வரை நடத்தப்பட்டது. சிபிஐ(எம்) கட்சியிலும் 1967ல் பிளவு ஏற்பட்டு ‘நக்சலைட்டுகள்’ வெளியே வந்தார்கள். அரசியல் தீர்மானம் பெருந்திரள் மக்கள் எழுச்சியையும் பந்த் இயக்கத்தையும் சுட்டிக் காட்டியது, சிபிஐ அந்தப் போராட்டங்களில் முன்னணியில் இருந்தது. வலதுசாரி பிற்போக்குச் சக்திகளிடமிருந்து அதிகரித்து வளரும் ஆபத்துக்களுக்கு எதிராக அது எச்சரித்தது; பெருந்திரள் ஜனநாயக முன்னணியை விரிவுபடுத்த அது அறைகூவல் விடுத்தது. சி.இராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 9-வது கட்சிக் காங்கிரஸ், கொச்சி-1971

2,43,248 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 995 சார்பாளர்கள் மற்றும் 182 பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். அரசியல் அறிக்கை, அரசியல் தீர்மானம், அமைப்புநிலை அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை நிறைவேற்றியது. காங்கிரஸ் விரோத அல்லது காங்கிரஸ் அல்லாத முன்னணி போன்ற எந்தக் கருத்தும் வலதுசாரி பிற்போக்கு சக்திகளுக்கே உதவிடும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெளிவுபடுத்தியது.

ஜனசங்கம் ஆர்.எஸ்.எஸ். கூட்டு ஆகப் பெரிய ஆபத்து. 1969ல் 14 ஏகபோக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. பிற்போக்கு மற்றும் முற்போக்கு சக்திகள் இடையே மோதல், முரண்பாடு கூர்மை அடைந்தது; சிபிஐ ஆதரவுடன் வி.வி.கிரி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எஸ்.ஏ.டாங்கே தலைவராகவும் (சேர்மன்) சி. இராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 10-வது கட்சிக் காங்கிரஸ், விஜயவாடா-1975

3,55,526 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 1246 சார்பாளர்கள் கலந்து கொண்டனர். 1975 ஜனவரி 27 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெற்றது. சிபிஐ அமைக்கப்பட்ட 50ம் ஆண்டு பொன்விழா குறித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சிபிஐ சேர்மன் எஸ்.ஏ.டாங்கே, ‘வலதுசாரி பிற்போக்கை அதிகாரத்திற்கு வர சிபிஐ அனுமதிக்காது’ என்று கூறினார். பேராயத்தின் இறுதி நாளில் 5 லட்சம் பேர் கலந்து கொண்ட பிரம்மாண்டமான பேரணி நடைபெற்றது. எஸ்.ஏ.டாங்கே தலைவராகவும், சி. இராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராகவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 11வது கட்சிக் காங்கிரஸ், பட்டிண்டா-1978

பஞ்சாப் மாநில பட்டிண்டாவில் 1978 மார்ச் 31 முதல் ஏப்ரல் 7வரை நடைபெற்றது. 5,46,732 உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 1183 முழு பிரதிநிதிகளும் மற்றும் 259 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அவசரநிலையை (எமர்ஜென்சி) சிபிஐ ஆதரித்தது தவறு என்று முடிவு செய்தது. தொடக்கத்தில் இருந்தே எமெர்ஜென்சி மக்கள் விரோதமாகவே இருந்தது. அதே நேரத்தில் ‘முழுப் புரட்சி’ என்றழைக்கப்பட்ட ஆர்எஸ்எஸ் தலைமையிலான ஜெ.பி. இயக்கத்திடமிருந்து உண்மையான அச்சுறுத்தல் இருந்தது என்பதைத் தெளிவுபடுத்தியது. எனவே நாம் பாசிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டது சரியே என்றும் கூறியது. இந்த இயக்கத்தின் முக்கிய மையமாக இருந்தது ஆர்எஸ்எஸ் மற்றும் ஜனசங்கம் என்று சுட்டிக் காட்டிய பட்டிண்டா பேராயம் இவ்வாறு அறிவித்தது: “அதிதீவிர வலதுசாரிகளால் கைப்பற்றுப்படும் ஆபத்து இவ்வாறு கடுமையானதாக இருந்தது.” என்னதான் நோக்கமாக இருந்தாலும், அவசரநிலை திணிப்பு இந்திரா காந்தியின் தனிப்பட்ட ஆட்சியை மட்டுமே வலுப்படுத்தியது; மேலும் அது வலதுசாரி பிற்போக்கிற்கே உதவியது. மாநாடு எஸ்.ஏ.டாங்கேவை சேர்மனாகவும், பொதுச் செயலாளராக சி.ராஜேஸ்வரராவையும் மீண்டும் தேர்ந்தெடுத்தது.

### 12வது கட்சிக் காங்கிரஸ், வாரணாசி - 1982

உ.பி. மாநில (காசி மற்றும் பெனாரஸ் எனப்படும்) வாரணாசியில் 1982 மார்ச் 22 முதல் 28வரை நடைபெற்றது. 1223 முழு பிரதிநிதிகளும் மற்றும் 188 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். சென்ற மாநாடு நடந்த காலத்திலிருந்து நாட்டில் அனைத்து வகையான வகுப்புவாத மற்றும் சீர்குலைவு சக்திகள் தலை தூக்கி ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படுத்தின என மாநாடு சுட்டிக் காட்டியது. “அனைத்தும் சேர்ந்த எதிர்த்தரப்பு ஒற்றுமை” என்ற கோட்பாட்டை மாநாடு கூர்மையாக விமர்சனம் செய்தது. சி.இராஜேஸ்வர ராவ் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 13வது கட்சிக் காங்கிரஸ், பாட்னா-1986

1986 மார்ச் 12 முதல் 17வரை நடைபெற்றது. 1027 பிரதிநிதிகளும் மற்றும் 71 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். “கொள்கை அடிப்படையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை மீண்டும் ஒன்றிணைப்பது” என்பதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிற்கிறது, ஆனால் அதற்கு மறுமொழி கிடைக்கவில்லை. தேசிய அளவில் சிபிஐ, இந்திய தேசியக் காங்கிரசுக்கு அடுத்து இரண்டாவதாக உள்ளது. சி.இராஜேஸ்வர ராவ் மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 14வது கட்சிக் காங்கிரஸ், கல்கத்தா - 1989

1989 மார்ச் 6 முதல் 12வரை நடைபெற்றது. 956 பிரதிநிதிகளும் மற்றும் 91 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். சோவியத் யூனியனின் நிகழ்வுகள் பிரதிநிதிகளின் கவனத்தைக் கவர்ந்தது. பெரேஸ்ட்ரோய்கா மற்றும் க்ளாஸ்நாட் குறித்து அங்கே பிரதிநிதிகள்



பலவாறு பேசினர். கட்சிப் பேராயம், “இத்தகைய சீர்திருத்தங்களின் முக்கியமான திசைவழி சரியானது என்று நமது கட்சி திருப்தி அடைகிறது மற்றும் நாம் அதனை ஆதரிக்கிறோம்” என்று கூறியதால் அதற்கு எல்லாமும் சரி என்று பொருளாகாது.

இந்திய அரசு அதனது வெளியுறவுக் கொள்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டுள்ளது. நாட்டில் வகுப்புவாத நிலைமை மோசத்திலிருந்து படு மோசமாகப் போனது. சி.இராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராகத் திரும்ப மீண்டும் தேர்வானார்.

### 15வது கட்சிக் காங்கிரஸ், ஹைதராபாத் - 1992

1992 ஏப்ரல் 16 முதல் நடைபெற்றது. விவாதங்களில் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நிகழ்வுகளும் அது தொடர்ந்து சோவியத் யூனியன் சிதறியதற்கு இட்டுச் சென்றது குறித்தும் மேலோங்கி இருந்தது: அது ஜனநாயகம் மற்றும் சோஷலிசம் குறித்த கேள்விகளை எழுப்பியது. முந்தைய நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, “சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நிகழ்ச்சிப் போக்குகள்” என்ற தலைப்பில் விரிவான ஆவணம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட மற்றொரு முக்கியமான ஆவணம், செயல்திட்ட ஆவணமாகும். இந்திய மற்றும் உலக நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் முழுமையான செயல்திட்ட ஆணவம் நிறைவேற்றுவதிலும் அதன் மீதான விவாதங்களையும் தாமதப்படுத்தி ஒத்தி வைக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. கட்சியில் விரிவான விவாதங்களுக்குப் பிறகு இதுவும் ஏற்கப்பட்டது.

ஹைதராபாத் பேராயம் நடைபெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன் சி.இராஜேஸ்வரராவ் உடல்நலம் குன்றிய காரணத்தால் இந்திரஜித் குப்தா பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். பேராயம் இந்திரஜித் குப்தாவைப் பொதுச் செயலாளராக உறுதி செய்தது.

### திரிச்சூர் அமைப்புநிலை மாநாடு - 1993

கேரள மாநிலம், திருச்சூரில் 1993 மார்ச் 11 முதல் 14 வரை இரண்டு ஆவணங்களை விவாதிக்க நடத்தப்பட்டது: ஒன்று, “சில ஸ்தாபனக் கடமைகள்,” மற்றொன்று, “ஜனரஞ்சகப் பெருந்திரள் அமைப்புகளும் கட்சியும்.” இம்மாநாடு மூன்றடுக்கு கட்சிக் கட்டமைப்பை, இரண்டடுக்காக மாற்றியது. இவ்வாறு மாற்றியமைப்பதால் பணிகளை மறுமுறையும் திரும்ப செய்வதைக் குறைக்கும் எனக் கருதப்பட்டது.

மாநாடு, கட்சி அமைப்பில் எஸ்சி, எஸ்டி, ஓபிசி, சிறுபான்மையினர் பிரிவுகள் மற்றும் பெண்களுக்கு முறையான பிரதிநிதித்துவம் அளிக்க முடிவு செய்தது. இரண்டடுக்கு ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டவாறு செயல்படவில்லை; எனவே, கட்சி மூன்றடுக்கு கட்டமைப்புக்கு மீண்டும் திரும்பியது.

### 16வது கட்சிக் காங்கிரஸ், புதுடெல்லி-1995

1995 அக்டோபர் 7முதல் 11வரை நடைபெற்றது. 720 பிரதிநிதிகளும் மற்றும் 44 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பாபர் மசூதி இடிப்பு (1992), இடதுசாரி மற்றும் கம்யூனிஸ்ட் ஒற்றுமை குறித்த கேள்விகள் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா நிகழ்வுகள் பேராயத்தில் முக்கிய பொருளாக விவாதிக்கப்பட்டன.

எதிர்வரும் தேர்தல்களில் மூன்று அணிகள் போட்டியிடக் கூடும் என்று சிபிஐ கூறியது: தேசியக் காங்கிரஸ் மற்றும் கூட்டணி, பாஜக தலைமையிலான கூட்டணி, இடதுசாரி முன்னணி.

இந்திரஜித் குப்தா பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 17வது கட்சிக் காங்கிரஸ், சென்னை - 1998

சென்னையில் 1998 செப்டம்பர் 14முதல் 19வரை கூட்டப்பட்டது. 975 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) அரசு 1998ல் சிறிது காலம் அதிகாரத்திற்கு வந்தது. மாநாடு, ஒரு மதசார்பற்ற ஜனநாயக மாற்றை மேலெடுத்து, வலதுசாரி பக்கம் திரும்புவதைத் தடுத்து, இடதுசாரிப் பக்கம் கொண்டு வருவதே நோக்கம் என்று கூறியது.

புதிய மாற்றில் காங்கிரஸ் கட்சி முக்கிய பங்காற்ற வேண்டும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியக் குழு ஏ.பி.பரதனைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. இந்திரஜித் குப்தா 1996ல் ஒன்றிய அமைச்சரவையில் சேர்ந்து உள்துறை அமைச்சரானதும், ஏ.பி.பரதன் 1996லேயே பொதுச் செயலாளர் ஆனார்.

### 18வது கட்சிக் காங்கிரஸ், திருவனந்தபுரம் - 2002

2002 மார்ச் 26முதல் 31வரை திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. 604பிரதிநிதிகளும் மற்றும் 56 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சூழலிலும், குஜராத்தில் பரவலான வகுப்புவாதக் கலவரங்கள் நடந்த பின்னணியிலும் நடந்தது. சிபிஐ மற்றும் சிபிஐ (எம்) ஒருங்கிணைப்பு குழுவின் செயல்பாடு நின்று போனது. வலிமையான சிபிஐ கட்சியே தற்போதைய தேவை; மற்றும் எதிர்வரும் காலம் தவறுகளைச் சரிசெய்வதாகவும், கட்சியை மறுசீரமைப்பதாகவும் இருக்கும் என்று மாநாடு கூறியது. ஏ.பி.பரதன் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 19வது கட்சிக் காங்கிரஸ், சண்டிகார் - 2005

2005 மார்ச் 29முதல் ஏப்ரல் 3வரை நடைபெற்றது. 549பிரதிநிதிகளும் மற்றும் 61 மாற்றுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இக்காலகட்டத்தில் சிபிஐ மற்றும் இடதுசாரிகள், (யூபிஏ1) ஐக்கிய முற்போக்கு கூட்டணி 1 அரசை ஆதரித்தன. கம்யூனிஸ்ட் ஒற்றுமைக்காகக் கையேந்தி இரந்து நிற்காது என்பதைத் தெளிவாக்கியதுடன், வலிமையான சுதந்திரமான கட்சியைக் கட்ட வேண்டும் என்று அறிவித்தது. 1964

தொடர்ச்சி 11ம் பக்கம்

# ஸ்டெர்லைட் ஆலை - துப்பாக்கி சூடு காவல்துறை வரம்பு மீறல் மட்டும்தானா?

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேள்வி

தூத்துக்குடியில் இயங்கி வரும் ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டு வந்தது. இப்பகுதியில் வசித்து வரும் மக்கள் பல வகையான நோய்த்தாக்குதலுக்கு ஆளாகி வந்தனர். இந்த நிலையில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர். அரசியல் கட்சிகள் உட்பட பல அமைப்புகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தன. கடந்த 2018 ஆம் ஆண்டில் ஸ்டெர்லைட் ஆலையின் ஆபத்தை உணர்ந்த பல அமைப்புகள் ஒருங்கிணைந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டன. இந்தப் போராட்டத்தின் நூறாவது நாளில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி சென்ற மக்கள் திரள் மீது காவல் துறை நடத்திய துப்பாக்கி சூட்டில் பள்ளி மாணவி உட்பட 13 பேர் களத்தில் கொல்லப்பட்டனர். ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். காவல்துறை தரப்பில் ஒரே ஒருவர் மட்டும் காயமடைந்தார்.

இந்த சம்பவம் பற்றி நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் விசாரித்து, அதன் அறிக்கையை 2022 மே மாதம் அரசுக்கு வழங்கியுள்ளது. இந்த அறிக்கையை தாமதமில்லாமல் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது

ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சம்பவத்தை விசாரித்த ஆணையம் காவல் துறையின் வரம்புமீறிய செயலையும், மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியத்தையும் உறுதி செய்து, அதற்கு காரணமானவர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் உள்துறை நிர்வாகத்திற்கு பொறுப்பான முதலமைச்சரும், அமைச்சரவையும் பெரும் முதலீட்டில் இயங்கி வந்த ஸ்டெர்லைட் ஆலையின் எதிர்விளைவுகள் குறித்து பரிசீலித்தார்களா? மக்கள் நலன் கருத்தில் கொள்ளப்பட்டதா? நூறுநாள் போராட்டத்தின் தீவிரம் குறித்து என்ன மதிப்பீடு செய்யப்பட்டது. உள்துறை தலைமையின் வழிகாட்டல் இல்லாமல், உள்ளூர் மட்ட காவல்துறையினர் அதிகார அத்துமீறலில் ஈடுபட்டார்களா? குடிமக்கள் 14 பேர் கொல்லப்பட்ட சம்பத்திற்கு காரணமானவர்கள் மீது குற்றவியல் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற வினாக்களுக்கு ஆணை அறிக்கை விளக்கம் அளிக்கவில்லை.

துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு தர வேண்டும் என அப்போதைய எதிர்கட்சித் தலைவர், இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கையில் 50 சதவீதம் ஏற்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை கழித்துக் கொண்டு, பாக்கி தொகை வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளதும் காயமடைந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ 10 லட்சம் இழப்பீடு பரிந்துரையும் ஆறுதல் அளிக்கிறது.

உயிரிழந்தோர், காயமடைந்தோர் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசின் நிரந்தரப் பணியிடத்தில் பணி நியமனம் வழங்க வேண்டும். நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்பதுடன், உள்துறை நிர்வாகத்தின் தலைமை அதிகாரிகள், அப்போதைய உள்துறை அமைச்சர் துப்பாக்கி சூடு சம்பவத்தின் போது செயல்பட்டது குறித்தும், விசாரிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

சாதி சான்றிதழ் வழங்க கால வரம்பு நிர்ணயம் செய்க!

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

“மலைக்குறவர்” சாதி சான்றிதழ் வழங்குவதில் ஸ்ரீபெரும் புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் அலட்சியமும் வரம்பற்ற தாமதமும், வேல்முருகன் (49) உயிரை பறித்திருக்கிறது. இரக்கம் கொண்ட இதயத்தை கசக்கிப் பிழியும் துயரச் சம்பவம் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடந்திருப்பது சமூகத்தின் முகத்தில் விழுந்த அடியாகும்.

கால வளர்ச்சியில், வாழ்க்கை முறையில், ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நூறாண்டுகளுக்கு முன்னர் மலைப்பகுதிகளில் வாழ்ந்த ஆதிவாசிகள், பழங்குடிகள், மலைவாழ் மக்கள் வாழ்வாதாரம் தேடி சமவெளி பகுதிக்கு புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும், சமூக அமைப்பில் இவர்களது சாதிப் படிநிலையில் முழுமையான மாற்றங்கள் நிகழ்ந்து விடவில்லை. இதன் அவசியம் உணர்ந்து தான் சமூகநீதி அமலாக்கத்தில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களிலும், மக்கள் பிரதிநிதித்துவ தேர்தல்களிலும் இடஒதுக்கீடு நடைமுறை சட்டப்பூர்வாக ஏற்கப்பட்டுள்ளது. இடஒதுக்கீட்டின் பலனை பெற சாதி சான்றிதழ் இன்றியமையாத் தேவையாகிறது. சாதி சான்றிதழுக்கு வருவாய்த்துறை நிர்வாகத்தை அணுகும் போது, மக்களுக்கு ஏற்படும் அனுபவம் மிகவும் கசப்பானது. அரசு நிர்வாகத்தின் வரம்பற்ற காலதாமதமும், ஊழல், முறைகேடுகளும் மக்களுக்கு ஆத்திரமூட்டி வருகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் “மலையாளி”யின மக்கள், தமிழ்நாட்டில் பிற பகுதிகளில் மலையாளி இன மக்களுக்கு பழங்குடி யின சாதி சான்றிதழ் வழங்குவது போல் வழங்க வேண்டும் என முப்பது ஆண்டுகளாக கோரி வருகின்றனர். இன்றும் தீர்வு காண முடியவில்லை. இது போன்ற பிரச்சினைகள் மீது தமிழ்நாடு அரசு காலத்தில் முடிவெடுத்து, சாதி சான்றிதழ் வழங்கும் நடைமுறையை எளிமைப் படுத்தி, காலவரம்பு நிர்ணயிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தீக்குளித்து உயிரிழந்த வேல்முருகன் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன். அவரது குடும்பத்திற்கு அரசு உரிய இழப்பீடு வழங்கி, அவரது மனைவிக்கு அரசுப் பணியும் வழங்க வேண்டும். உயிரிழந்த வேல்முருகனின் பிள்ளைகளுக்கு உடனடியாக சாதி சான்றிதழ் வழங்குவதுடன், அவர்களுக்கு ஏற்படும் கல்விச் செலவு முழுவதையும் அரசு ஏற்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

10ம் பக்கத் தொடர்ச்சி

பிளவு ஏற்பட்டதிலிருந்து சிபிஐயின் கருத்து பெருமளவு நிரூபிக்கப்பட்டது. ஏ.பி.பரதன் பொதுச் செயலாளராகவும், எஸ். சுதாகர் ரெட்டி துணைப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 20வது கட்சிக் காங்கிரஸ், ஹைதராபாத் - 2008

2008 மார்ச் 23முதல் 27வரை நடைபெற்றது. கட்சியின் அடித்தளத்தையும், கட்சியின் தனித்த சுதந்திரமான மதிப்பையும் கட்டுவது என்பதன் மீது முக்கிய அழுத்தம் தரப்பட்டது. மேலும் ஜனரஞ் சக பெருந்திரள் அமைப்புக்களின் அடித்தளத்தை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது. மீண்டும் ஏபி பரதன் பொதுச் செயலாளராகவும், எஸ்.சுதாகர் ரெட்டி துணைப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 21து கட்சிக் காங்கிரஸ், பாட்னா - 2012

2012 மார்ச் 27முதல் 31வரை நடைபெற்றது. அரசியல் தீர்மானம், அரசியல் மறுபரிசீலனை அறிக்கை மற்றும் ஸ்தாபன அறிக்கை விவாதிக்கப்பட்டன. கட்சி அமைப்பு விதிகளில் நுழைவுக் கட்டணம், செயலர்களின் பதவிக் காலம் முதலிய சில திருத்தங்கள் செய்யப்பட்டன. பரந்த இடதுசாரி மற்றும் ஜனநாயக ஒற்றுமையை வலியுறுத்தியதுடன், இடதுசாரி ஒற்றுமை மேலும் வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்றது. எஸ்.சுதாகர் ரெட்டி பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 22வது கட்சிக் காங்கிரஸ், புதுச்சேரி - 2015

2015 மார்ச் 25முதல் 29வரை புதுச்சேரியில் நடைபெற்றது. 819 பிரதிநிதிகள், மாற்றுப் பிரதிநி திகள், பார்வையாளர்கள் மற்றும் அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கட்சியின் புதிய செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது. மேலும் நிரந்தரமான செயல்திட்ட ஆணையம் நியமிக்கப்பட்டது. அரசியல் தீர்மானம், கார்ப்ரேட் வலதுசாரி வகுப்புவாதச் சக்திகளை அதிகாரத்திலிருந்து இறக்குவதும், மக்களின் மாற்றைக் கட்டி எழுப்புவதும் மிகவும் முக்கியமானது என வலியுறுத்தியது.

“மக்களுடன் மீண்டும் ஒன்றிணையுங்கள்!” என்று பேராயம் கட்சி முழுமையையும் அறிவுறுத்தியது. எஸ்.சுதாகர் ரெட்டி பொதுச் செயலாளராகவும், குருதாஸ் தாஸ்குப்தா துணைப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 23வது கட்சிக் காங்கிரஸ், கொல்லம் - 2018

2018 ஏப்ரல் 25முதல் 29வரை கேரளாவின் கொல்லத்தில் நடைபெற்ற பேராயத்தில் 810 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வலிமையான சிபிஐ கட்சியைக் கட்டுவதை வலியுறுத்தும்போது, பரந்துபட்ட ஒற்றுமைக்கு எதிரானதாக இடதுசாரி ஒற்றுமை அமையக் கூடாது என்பதை அரசியல் தீர்மானம் தெளிவாக்கியது. அனைத்து மதசார்பற்ற, ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகளின் பரந்த மேடை கட்டியமைக்க வேண்டும் என்றது.

எஸ்.சுதாகர் ரெட்டி பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2019 ஜூலை தேசியக் கவுன்சில் கூட்டத்தில் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து சுதாகர் ரெட்டி ஓய்வு பெற்றார்; அந்தப் பொறுப்பிற்கு டி.ராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 24வது கட்சிக் காங்கிரஸ், விஜயவாடா - 2022

24வது கட்சிப் பேராயம் தற்போது விஜயவாடா நகரில் (2022 அக்டோபர் 14 முதல் 18வரை) சீரும் சிறப்புமாக நடைபெற்றது. கடந்த சில ஆண்டுகளில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை சுமார் 6,50,000 ஆகும்.

நன்றி : நியூஏஜ்

தமிழில் : நீலகண்டன்

5ம் பக்கத் தொடர்ச்சி

வழக்கம் சமுதாய நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கும் வரை பின்பற்றப்பட்டன. இது தர்ம சாஸ்திரங்களில் இடம்பெற்றது. இது சட்டமாக மாறியது. இதில் பல்வேறு வகையான நீதிகள் அவர்களுக்கு அடிப்படை. இந்த நூல்களை எழுதியவர்கள் பிராமணர்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் மற்ற மேல்தட்டு வர்க்கத்தினரின் துணையுடன்தான் இவற்றை எழுதினர். இவை அந்தக் காலத்தின் தேவைக்கு ஏற்றபடி பல மாறுதல்களுக்கு உள்ளாயின.

இதில் இரண்டாவது அம்சம் தீண்டாமை என்பது. இது இன்று அதிகம் பேசப்படும் ஒன்று. இதனை பிராமணர்கள் புகுத்தினர் என்று ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இது ஒரு கருத்து முதல்வாத அணுகுமுறையாகும். ஒன்றைப் புகுத்திய உடன் அதனை மற்றவர்கள் பின்பற்றினர் என்பதும் இத்தகைய அணுகுமுறையாகும். இது சமுதாய நடைமுறையில் இருந்ததன் காரணமாக அதனையே சட்டமாக்கினர். ஆனால் இந்தக் கருத்து எவ்வாறு தோன்றியது?

இதற்கு வேறு ஒன்றைக் காண வேண்டும். வேலைப்பி ரிவினையின் ஒரு அம்சம் மூளை உழைப்பிற்கும், உடல் உழைப்பிற்கும் உள்ள பிரிவினை. இது இனக் குழு அமைப்பாக இருந்த காலத்திலேயே தோன்றிவிட்டது. மூளை உழைப்பாளிகள், உடல் உழைப்பில் ஈடுபட்டவர்களை சற்று அருவருப்புடனே பார்த்தனர். காரணம் உடல் உழைப்பானது சற்று அசுத்தம் நிறைந்ததாகவே இருந்தது.

பிராமணர்களது உழைப்பு ஒரு வகையானது, சத்திரியர்களது உழைப்பு வேறு வகையானது, வைசியர்களது உழைப்பு வேறு வகையானது. அதனால், இந்த மூன்று அடுக்கினரிடமும் மூளை உழைப்பு இருந்தது. பிராமணர்கள் சுத்த மூளை உழைப்பாளிகள். மற்றவர்கள் மூளை உழைப்பும், உடல் உழைப்பும் இணைந்த உழைப்பாளிகள். கைத் தொழிலாளிகளும் அவ்வாறே.

இவற்றிற்கு எல்லாம் அடிமட்டத்தில் இருந்த அடிமைகள் உடல் உழைப்பினை மட்டுமே கொண்டவர்கள். எனவே இந்த அருவருப்பு என்பது மேலே உள்ளவர்களிடையே சற்று குறைவாக இருந்தது. அருவருப்பு பண்ணையடிமைகள் மீது விழுந்தது. இதுதான் தீண்டாமையின் ஊற்றுக்கண் எனலாம்.

இந்த சமுதாய அடித்தளத்தின் மீது தோன்றிய இந்த நடைமுறை கருத்தியல் உலகில் விரிவாக் கப்பட்டு மாற்ற முடியாத சட்டமாக மாறியது. இது அன்றைய சமுதாய நடைமுறையின் விளைவு ஆகும். இது போன்ற வேறுபாடுகள் மேலை நாட்டிலும் இருந்தன. பிரபுக்கள் தங்களுக்கு கீழானவர்களை அருவருப்புடன் பார்த்தனர். அவர்களை தள்ளி வைத்தே பேசினர். ஆனால், அங்கு சமுதாய மாற்றம் விரைவாக இடம் பெற்றதன் காரணமாக வும், கருவிகளின் முன்னேற்றம் காரணமாகவும் இது இறுக்கமாக இடம்பெறவில்லை.

மேலும் மேலை நாடுகளில் இடப்பெயர்ச்சி அதிகமாக இருந்தது. இது அங்கு சுய தேவை பூர்த்திக்கான வசதியின்மை காரணமாக ஏற்பட்டது ஆகும். இதன் காரணமாக அங்கு சமுதாய குழுக்கள் உருவாகவில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் காணும்பொழுது, மார்க்ஸ் கூறுவதுபோல் சாதியப் பிரிவு அடிப்படையில், தொழில் பிரிவில் இடம் பெறுகிறது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மற்றவை இது சார்ந்த கருத்தாக்கங்கள்.

இந்த அடிப்படை மாறிய பொழுது அது தகர்ந்தது என்பதையும் காணவேண்டும். இன்றைய பொருளாதார மாறுதல்கள் காரணமாக பழைய முறையில் அது இல்லை. அது பல மாறுதல்களுக்கு உள்ளாகி உள்ளது என்பதையும் காண வேண்டும். இன்று உள்ள மாறுதல்கள் தனியாக ஆராயப்பட வேண்டியவை ஆகும். அதை விட்டு விட்டு கருத்தியில் சார்ந்த அம்சங்களை பெரிது படுத்தி பேசுவது, பொருள்முதல்வாத அணுகுமுறை ஆகாது. அது கருத்து முதல்வாத அணுகுமுறை ஆகும்.

தொடர்புக்கு: 98947 83657

# கோவை மாவட்ட ஏஐடியூசி
# புதிய நிர்வாகிகள் தேர்வு




கோவை மாவட்ட ஏ ஐ டி யு சி கவுன்சில் 16வது மாநாடு கடந்த 9 ம் தேதி கோவையை அடுத்துள்ள துடியலூர் என்.ஜி.ஜி.ஓ. காலனி அருகே உள்ள கிருஷ்ணா திருமண மண்டபத்தில் தோழர். தா. பாண்டியன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. தோழர்கள் ஆர்.ஏ.கோவிந்தராஜன், சி.வி.சுப்பரமணியன் நினைவு நுழைவு வாயில் அமைக்கப்பட்டு இருந்தது. மாநாட்டு கொடியை என்.கிருஷ்ணன் ஏற்றி வைத்தார். இந்த மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி.ன் பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி, ஆர்.ஆறுமுகம், எம்.ஆறுமுகம் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினார்கள். கோவை மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி. கவுன்சில் தலைவராக எம்.ஆறுமுகம், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராக சி.தங்கவேல், பொருளாளராக பி.சுப்ரமணியம் ஆகியோரும், 15 பேர் கொண்ட நிர்வாக குழுவும், 45 பேர்கள் கொண்ட மாவட்ட கவுன்சிலும் தேர்வு செய்யப்பட்டது.

பொதுக் கூட்டத்திற்கு கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சி.சிவசாமி தலைமைதாங்கினார். ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, ஏ.ஐ.டி.யூ.சி. மாநில செயலாளர் எம்.ஆறுமுகம், அரசு போக்குவரத்துக்கு கழகங்களின் தொழிலாளர் சம்மேளன மாநில பொது செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாவட்ட கவுன்சில் செயலாளர் சி.தங்கவேல் உள்ளிட்டோர் சிறப்புரை நிகழ்த்தினர். பி.சுப்பரமணியன் நன்றி கூறினார்.

# தென்காசி மாவட்ட
# ஏஐடியூசி முதல் மாநாடு

தென்காசி மாவட்டம், சிவகிரி கட்சி அலுவலகத்தில் அக். 9 அன்று மாவட்ட ஏஐடியூசி முதல் மாநாடு நடைபெற்றது.

முதுபெரும் தோழர் சங்கரையா கொடி ஏற்றினார். மாவட்ட தலைவர் சி.சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

மாவட்ட பொதுச்செயலாளர் டி.சுப்பையா வேலை அறிக்கை வரவுசெலவு வாசித்தார்.

முதுபெரும் தோழர் ஏஐடியூசி கௌரவ தலைவர் ஏ.சாமி தொடக்கஉரை நிகழ்த்தினார்!

ஏஐடியூசி மாநில செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன், சிபிஐ மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை, ஏஐடியூசி மாநில நிர்வாக குழு பி.சடையப்பன், மாவட்ட பொருளாளர் எல்.கிருஷ்ணசாமி, சிபிஐ மாவட்ட குழு சிங்காரவேலர். சிபிஐ மாவட்ட குழு எஸ். மாரியப்பன், நகர செயலாளர் பி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

புதிய நிர்வாகிகள்: மாவட்ட தலைவராக சி.சுப்பிரமணியன், மாவட்ட கௌரவ தலைவராக ஏ.சாமி, மாவட்ட துணை தலைவர்களாக டி.இசக்கித்துரை, மணிவண்ணன், முனியாண்டி, மாவட்ட பொது செயலாளராக டி.சுப்பையா, மாவட்ட செயலாளர்களாக வேலு, ஏ.பரமசிவன், சரஸ்வதி, கே.பழனிச்சாமி, மாவட்ட பொருளாளராக எல்.கிருஷ்ணசாமி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு தினம்

மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 63 வது நினைவு நாள் கூட்டம் தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்றம் திருவாரூர் கிளையின் சார்பாக நடைபெற்றது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் உருவப்படத்திற்கு மன்றத்தின் தலைவர் எம்.நாகராஜன் மலர்மாலை அணிவித்தார். மன்றத்தின் செயலாளர் வீ.தர்மதாஸ், மன்றத்தின் துணைத்தலைவர்கள் காளிமுத்து, சக்தி, செல்வகணபதி, முன்னாள் மன்ற மாநிலக்குழு உறுப்பினர், கவிஞர் கூடூர் குணா, தமிழ் சங்க பொறுப்பாளர்கள் ஆரூர் அறிவு, ஆரூர் அழகு, கோமல் தமிழ் அமுதன் ஆகியோர் புகழ் அஞ்சலி செலுத்தினர். மன்றத்தின் பொருளாளர் கா.பாலதண்டாயுதம் நன்றி கூறினார்.

# வீட்டு மனை கேட்டு வி.தொ.ச. ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கம் சேலம் மாவட்டக் குழு சார்பில், வீடு இல்லாத ஏழைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை கேட்டும், நீண்ட நாட்களாக வீடு கட்டி குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு பட்டா வழங்க கேட்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக விதொச மாவட்ட செயலாளர் எஸ்.தனக்கோட்டி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.மோகன், துணைச்செயலாளர் எம்.ராமன், சேலம் ஒன்றிய செயலாளர் வி.ஜெயராமன், அயோத்தியாபட்டணம்வாழப்பாடி ஒன்றிய செயலாளர் ஜி.ராஜா, விதொச மாவட்ட பொருளாளர் பி.கந்தன் ஆகியோர் கோரிக்கை உரையாற்றினர்.

# ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க மாநாடுகள்




**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் எம்.ரெட்டியபட்டி வேலம்மாள் திருமண மண்டபத்தில், தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்க விருதுநகர் மாவட்ட 8வது மாநாடு நடைபெற்றது. மாவட்ட தலைவர் தங்கராஜ் , இராமச்சந்திரன் ஆகியோர் தலைமை வகித்தார்கள். கஸ்தூரி வரவேற்றார். மாநில துணை பொதுச்செயலாளர் என்.செல்வராஜ் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். மாநில பொருளாளர் ஆர்.முருகன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துமாரி, சிபிஐ மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், தவிச சீனிவாசன், அமைப்புசாரா சங்க முனியசாமி, திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம் ஆகியோர் பேசினார்கள். மாவட்ட செயலாளர் நடராஜன் வேலை அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார்.

தலைவராக தங்கராஜ், துணைத் தலைவர்களாக பாண்டி, முத்துசெல்வி ,செயலாளராக நடராஜன், துணைச் செயலாளராக சித்ராதேவி, பொருளாளராக மாரியப்பன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ காலங்களில் 6மாத விடுப்பு சம்பளத்துடன் வழங்க வேண்டும், ஓய்வூதியம் ரூ.6000, தீபாவளி போனஸ் ரூ.5000 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கிளை செயலாளர் ஜீவானந்தம் நன்றி கூறினார். முதல் நாள் 400 பேர்கள் கலந்து கொண்ட பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

**தென் சென்னை:** தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் தென் சென்னை மாவட்ட மாநாடு, திருவான்மியூர், மேற்குக் குளக்கரை வீதி, மகாலட்சுமி திருமண மண்டபத்தில் சி.ஆர்.நரசிம்மன் நினைவரங்கில், சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.தாயுமானவன் தலைமையில் நடைபெற்றது. கே.ஜெயராமன் மாநாட்டுக் கொடியினை ஏற்றினார். டி.சி.கே.சுந்தரம் வரவேற்புரையாற்றினார். எஸ்.லெட்சுமணன் அஞ்சலித் தீர்மானத்தை முன் மொழிந்தார்.மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி மாநாட்டைத் துவக்கி வைத்தார். செயலாளர் சி.சீனிவாசன் அறிக்கை சமர்ப்பித்தார். சென்னைப் பெருநகர தொழிலாளர் சங்கத்தின் தலைவர் வி.சீனிவாசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்சென்னை மாவட்டச் செயலாளர்.எஸ்.கே. சிவா, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் கு.காமாட்சி, ஏஐடியூசி தென் சென்னை மாவட்டப் பொதுச் செயலாளர் இரா.அழகேசன், ஏஐடியூசி வடசென்னை மாவட்டப் பொதுச் செயலாளர் இரா.அருள் அழகன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

சங்கத்தின் அனைத்திந்திய பொதுச் செயலாளர் கே.இரவி நிறைவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் சி.சீனிவாசன் நன்றி நவின்றார்.

மாநாட்டில் சங்கத்தின் புரவலராக எஸ்.கே. சிவா, தலைவராக டி.சி.கே.சுந்தரம், செயலாளராக சி.சீனிவாசன், பொருளாளராக ஏ.தாயுமானவன், துணைத் தலைவர்களாக பி.ஜி.மணி, க.வீரபாண்டியன், பி.மணிவேல், துணைச் செயலாளர்களாக ஜெ.சுரேஷ்,ஆர்.ரவிக்குமார், ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். பெண் கட்டிடத் தொழிலாளர் பிரிவுத் தலைவராக கு.காமாட்சி தேர்வு செய்யப் பட்டார்.

**மயிலாடுதுறை:** தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிடத் தொழிலாளர் சங்கம் 8வது மயிலாடுதுறை மாவட்ட மாநாடு வைத்தீஸ்வரன் கோயில் பழனியம்மாள் திருமண மண்டபத்தில் கட்டிட தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் சி.மதியழகன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டு கொடியினை மாநில செயலாளர் தில்லைவனம் ஏற்றி வைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். வேலை அறிக்கையை ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் கே.ராமன் சமர்ப்பித்தார். வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ் வி.தொ.ச.மாவட்ட தலைவர் வே.நீதிசோழன் சிறுபான்மை பொறுப்பாளர் ஒய்.எஸ்.சர்புதின் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டை வாழ்த்தி பேசினர். கூட்ட முடிவில் புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

# இஸ்கஃப் கோவை மாவட்ட மாநாடு

இஸ்கஃப் கோவை மாவட்ட மாநாடு கோவை சன்மார்க்க சங்கத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எம்.வி.ராஜன் வரவேற்புரை நல்கினார். வழக்கறிஞர் கே.சுப்ரமணியன் தலைமை தாங்கினார். கலைமாமணி மா.பத்ரப்பன், ராஜன், ராமசாமி ஆகியோர் பட்டுக்கோட்டை மற்றும் கிராமியப் பாடல்களைப் பாடினர். கவிஞர் பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்ரமணியம் தொடக்கவுரையாற்றினார். காலத்திற்கு ஒவ்வாத மனுதர்மத்தை புறந்தள்ளுவது சரியே. மேலும் நமது ஆன்மீகத் தலைவர்களில் சமூக சமத்துவத்தைப் பேசிய ராமானுஜர், வள்ளலார், நாராயணகுரு மற்றும் சங்க இலக்கியம் ஆகிய மரபுகளையும் நாம் கையிலெடுக்க வேண்டும். மதநல்லிணக்கம் வேரூன்ற பேராசான் ஜீவா முன்னெடுத்த மனிதநேயப் பார்வை இன்றைக்குத் தேவை" என்றார்.

பத்மஸ்ரீ விருது பெற்ற சிற்பி அவர்களுக்கு பல்வேறு அமைப்புகள் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. பழங்குடி செயல்பாட்டாளர் ஒடியன் லட்சுமணன், யுவபுரஸ்கார் விருதாளர் கவிஞர் பா.காளிமுத்து, தொல்லியலாளர் முனைவர் ந.இராஜேந்திரன், மேடைப் பேச்சு விருதாளர் ப.நி.சிநேகா ஆகியோரைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இஸ்கஃப் மாநிலச் செயலாளர் த.இந்திரஜித் மாநாட்டினை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். இஸ்கஃப் பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், பல்சமய நல்லுறவு இயக்கத்தின் மாநிலத் தலைவர் முகமது ரஃபி, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இஸ்கஃப் மாவட்டச் செயலாளர் அறிக்கை ஏற்கப்பட்டு, புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன் நன்றி கூறினார்.

# பொன்னேரியில் ஆர்டிஓ அலுவலகம் முற்றுகை

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் இருந்து தத்தமஞ்சி கிராமத்திற்கு செல்லும் நெடுஞ்சாலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால் பாதாள சாக்கடை திட்டத்திற்காக பள்ளம் தோண்டப்பட்டது. இந்த பாதாள சாக்கடை திட்டத்தால் தத்தமஞ்சி கிராமம் முழுமையாக பொன்னேரியில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் வரை மக்கள் நடந்தே செல்ல வேண்டி இருக்கிறது. பல முறை மனு கொடுத்தும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்காத நிலையில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் கிருஷ்ணன் தலைமையில் கிராம மக்கள் சுமார் 250 பேர் ஆர்டிஓ அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். உடனடியாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வந்த சட்டமன்ற உறுப்பினர், ஆர்டிஓ ஆகியோர் வேலையை உடனடியாக துரிதப்படுத்தப்படும் என்று உத்தரவாதம் அளித்ததன் பேரில் ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## இந்த வார தம்பிக்குறள்

### 92. குறிக்கொண்டு வாழ்

**குறித்த குறித்தபடி யாற்றின் ஒருவன்**
**விரும்பிய வேண்டி வரும்.**

செய்ய வேண்டிய பணிகளைக் குறித்த காலத்தில் குறித்தபடி செய்து முடிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒருவன் விரும்பும் அனைத்தும் அவனைத் தேடி வரும். (காலத்தைக் கணக்கிட்டு செலவிடுக)

**குறைந்துமே வாழ்ந்தும் குறிகொண்டு வாழ்ந்தால்**
**நிறைவாழ்வே யாகும் நினை.**

சிறிது காலமே உயிர்வாழ்ந்தாலும், குறிக்கோளுடன் வாழ்ந்தால், அதுவே நிறைவு பெற்ற பெருவாழ்க்கையாகும் (பாரதி, பட்டுக்கோட்டை, விவேகானந்தர், கணக்கியல் மேதை ராமாநுசம் – குறைந்த காலம் வாழ்ந்தவர்களே)

# ஈஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்




யானை வழித்தடங்களை ஆக்கிரமித்துள்ள ஈஷா, காருண்யா நிறுவனங்களுக்கு ஒன்றிய மாநில அரசுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலிருந்து விலக்களிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பெரியாரீய, அம்பேத்கரீய அமைப்புகள் ஆர்ப்பாட்டம்.

ஈஷா மற்றும் காருண்யா நிறுவனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள வனம் சார்ந்த யானை வழித்தடங்கள் அமைந்துள்ள நிலங்களை ஆக்கிரமித்து கட்டிடங்களை எழுப்பியுள்ளது.

இதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக நல அமைப்புகள், இயற்கை ஆர்வலர்கள் இடையே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த நிலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலிருந்து விளக்கு கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. வழக்கு எண் கீறி467/2022, இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் விலக்கு அளிக்கக்கூடாது, மற்றும் மாநில அரசுகள் விளக்கு அழிக்காமல் இருக்க உறுதியுடன் வாதாட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிபிஐ, சிபிஎம், வி.சி.க. மற்றும் பல்வேறு கட்சிகள், அமைப்புகள் ஆழாந்துறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.பத்மநாபன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பி. மௌன சாமி, மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், துணை செயலாளர் ஏ.பி.மணிபாரதி, பொருளாளர் என்.நந்தகுமார், ஏ.சுப்பிரமணியம்,

மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், தொண்டாமுத்தூர் ஒன்றிய குழு செயலாளர் கணேசமூர்த்தி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி,

இந்திய மாதர் தேசிய சம்மதனத்தின் கோவை மாவட்ட செயலாளர் கே. சுமதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் பூர்ணிமா நந்தினி, மாவட்ட செயலாளர் பவன்குமார்,

ஆர்ப்பாட்டத்தில் ஈஷா மற்றும் காருண்யா நிறுவனங்கள் கட்டியுள்ள கட்டிடங்கள் மீது மாநில அரசு சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், ஈஷா மையம் பழங்குடி மக்களுக்கு என ஒதுக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமித்துள்ளது, அவற்றை அவர்களுக்கு திருப்பி வழங்க வேண்டும்.

ஒன்றிய அரசு பயிற்சி என்பதன் பெயரால் ஈஷா மையத்திற்கு வழங்கி வரும் மானியங்கள், உதவித்தொகைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி உள்ள நிலங்களை வருவாய் துறை நன்செய் நிலங்களை புன்செய் நிலங்களாக மாற்றி தரக்கூடாது, தமிழக அரசு பொதுப்பணித்துறைக்கு சொந்தமான குளங்களை ஈஷா மையத்திற்கு குத்தகைக்கு விடக்கூடாது, குளங்களில் பழங்குடியின மக்கள் மீன்பிடிப்பதை தடுக்கக் கூடாது, ஒன்றிய அரசு பெரும் நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதியை ஈஷா பயன்படுத்துவதை அனுமதிக்க கூடாது.

புகழ்பெற்ற வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயில் உள்ள மலையில், அதனை விட உயரத்தில் ஈஷா மையம் எந்த அடையாளத்தையும் ஏற்படுத்த அனுமதிக்க கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கை முழக்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன.

## மூத்த உறுப்பினர் கூடுமியான் மறைவு
## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் கட்சி அமைப்புகளை நிறுவிய தோழர்களில் ஒருவரான தோழர் கூடுமியான் (97) அக். 17 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலத்தில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு, ஆழ்ந்த வேதனையுற்றோம்.

நாடு விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில், ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க அமைப்பில் விவசாயிகள் அணி திரட்டப்பட்டனர். தியாக சீலர் பி. சீனிவாச ராவ் வழிகாட்டலில் டாக்டர் லலிதா அண்ணாஜி, தெய்வம், என். முத்து போன்ற முன்னணி தலைவர்களோடு தோழர் கூடுமியான் இணைந்து செயல்பட தொடங்கியவர். பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்புகளை கட்டுவதிலும், ஊழியர்களை ஊக்கப்படுத்தி செயலில் ஈடுபடுத்துவதிலும் முனைப்புக் காட்டியவர். தருமபுரி மாவட்டம் அமைந்த போதும், புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் உருவான போதும் கட்சி அமைப்புகளில் தொடர்ந்து செயல்பட்டு வந்தவர்.

கட்சி அமைப்புகளில் தத்துவார்த்த விவாதங்கள், அமைப்பு நிலை பிரச்சினைகள் தீவிரமாகி நெருக்கடி ஏற்பட்ட காலங்களிலும், அரசியல் தெளிவுடன், கட்சி விதிகளை பின்பற்றி, இறுதி மூச்சு வரை நெறிபிறழாமல் வாழ்ந்து காட்டியவர். அன்னாரது வாழ்வும், பணியும் இளைய தலைமுறைக்கு ஊக்கமூட்டும் பாடமாக அமைந்திருக்கிறது.

தோழர் கூடுமியான் முதல் மனைவி, இறந்த பின்னர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டவர். மனைவியும் இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் இருக்கின்றனர். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் செலுத்தி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## நரசிங்கத்தில் வெறிநாய்களை கட்டுப்படுத்துக!

மதுரை புறநகர் மாவட்டம், நரசிங்கம் ஊராட்சியில் கடந்த சில மாதங்களாக தெரு நாய்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சமீபத்தில் நரசிங்கம் ஊருக்குள் வெறி நாய் கடித்ததில் நரசிங்கம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் பெருமன்ற புறநகர் மாவட்டச் செயலாளர் கிரிஷ் பாக்கியம் உள்ளிட்ட 11 பேர் காயமடைந்தனர். இதில் காயமடைந்த அனைவரும் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் பெண்கள் பயந்து கொண்டு வீட்டிற்குள்ளேயே உள்ளனர்.

இதற்கிடையே நரசிங்கம் மற்றும் ஒத்தக்கடை கிராமத்தில் அதிகரித்து வரும் தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த தமிழக அரசு மற்றும் ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதுரை புறநகர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஏ.ஐ.டி.யூ.சி.யின் 27 ம் ஆண்டு உறுப்பினர் பேரவைக் கூட்டம்

ஏ.ஐ.டி.யூ.சி மதுரை புறநகர் மாவட்டம் தெற்கு தாலுகா அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் சார்பில், 27 ம் ஆண்டு உறுப்பினர் பேரவைக் கூட்டம் துணை தலைவர்கள் டி.மாரி, ஜே.விஜயா தலைமையில் திருப்பரங்குன்றம் எஸ்.பி.பி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில், மூத்த தோழர் பாலகிருஷ்ணன் சங்கத்தின் கொடியினை ஏற்றினார். சிபிஐ மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினரும் ஏ.ஐ.டி.யூ.சி சங்கத்தலைவருமான பா.காளிதாஸ் துவக்க உரை ஆற்றினார். பொதுச் செயலாளர் தினகரமோகன் வேலையறிக்கையினை முன் மொழிந்தார், பொருளாளர் முத்துப்பாண்டி வரவுசெலவு கணக்கினை சமர்ப்பித்தார். மேலும், சிபிஐ புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், மாவட்டத் தலைவர் எம்.எஸ்.முருகன், ஆட்டோ சங்கம் பொதுச் செயலாளர் சித்திக், பொருளாளர் முத்துப்பாண்டி, மாதர் சம்மேளனத்தின் புறநகர் மாவட்ட பொறுப்புச் செயலாளர் நாகஜோதி, வி.தொ.மாநில குழு உறுப்பினர் மெய்யர் ஆகியோர் பேரவை கூட்டத்தை வாழ்த்தி பேசினர்.

இக் கூட்டத்தில் ஏ.ஐ.டி.யூ.சி அமைப்பு சாரா தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவராக பா.காளிதாஸ், பொதுச் செயலாளராக ஆர்.பாலகிருஷ்ணன், கௌரவ தலைவராக தினகரமோகன், பொருளாளர் முத்துப்பாண்டி ஆகியோர் உள்ளிட்ட 25 நிர்வாக குழு உறுப்பினர்கள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## 25% போனஸ் வழங்க கோரி
## போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியூசி தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக 25% போனஸ் வழங்க கோரி ஆர்ப்பாட்டம் அக்.10 அன்று தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் நகரக் கிளைகள் முன்பாக சங்கத் தலைவர் என்.சேகர் தலைமையில் நடைபெற்றது. ஒய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தினை ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் துவக்கி வைத்து பேசினார். கோரிக்கைகளை விளக்கி மாநிலத் துணைத் தலைவர் துரை.மதிவாணன், பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், பொருளாளர் சி.ராஜ மன்னன் ,ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, நுகர் பொருள் வாணிப கழக சங்க பொருளாளர் தி.கோவிந்தராஜன் உள்ளிட்டோர் உரையாற்றினர். முடிவில் தஞ்சாவூர் நகர கிளை செயலாளர் ஆர். ரெங்கதுரை நன்றி கூறினார்.

**மதுரை:** தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மதுரை மண்டல தலைமையகம் முன்பு ஏஐடியூசி சார்பில் போனஸ் கோரிக்கை ஆர்ப்பாட்டம் மாநிலத் துணை பொது செயலாளர் எம்.நந்தா சிங் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சப்பானி, ஷேக் அப்துல்லா, ஜெயந்தி, நந்தா சிங், பாண்டியராஜன், சங்கர், குமார், ஸ்டாலின், செந்தில்குமார், முருகேசன், வீரபத்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தூய்மை பணியாளர்களின்
## அடிப்படை ஊதியத்தை மாதம் ரூ.18000 ஆக உயர்த்திடுக!
### பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம்

ஏஐடியூசி தூய்மைப் பணியாளர் சங்கம் மற்றும் அனைத்து போராட்ட கூட்டுக் குழு சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளம் மாதம் ரூ.18000 உயர்த்தி வழங்க வேண்டும். தூய்மை பணியாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்க வேண்டும். இன்சூரன்ஸ், குடும்ப பாதுகாப்பு இன்சூரன்ஸ் வழங்க வேண்டும். தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய அடையாள அட்டை வழங்க வேண்டும். அனைவருக்கும் ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தீபாவளி பண்டிகை போனஸ் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அக்.12 அன்று சென்னை சைதாப்பேட்டையில் உள்ள இயக்குநர் அலுவலகம் முன்பு பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு முழுவதுமிருந்து தூய்மை பணியாளர்கள் சாரை சாரையாக பங்கேற்றதால் சென்னை சைதாப்பேட்டை தூய்மை பணியாளர்கள் களமாக மாறியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஒன்றிய பகுதியிலிருந்து ஏஐடியூசி தூய்மைப் பணியாளர் சங்கத் தலைவர் எம்.ஆர். முருகன் தலைமையில் எம்.மருதம்பாள், டி.நிர்மலா உள்ளிட்ட 25க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## டியூகாஸ் முடக்கம்
## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கோவையை அடுத்த துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (டியூகாஸ்) இந்த கூட்டுறவு நிறுவனம் 1955 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 13 வருவாய் கிராமங்கள், 56 குக் கிராமங்களை உள்ளடக்கி துவங்கப்பட்ட இந்த கூட்டுறவு நிறுவனம், தற்போது தமிழக முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாக கொண்டு தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகிறது. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய கூட்டுறவு சங்கம் என்ற பெயர் பெற்றுள்ளது.

விவசாயத்திற்கு தேவையான சான்று விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், வேப்பம் பிண்ணாக்கு, நுண்ணூட்டச் கலவை, பண்ணை மற்றும் வேளாண் கருவிகள், டிராக்டர் சேவை, பெட்ரோல் பங்க், ஆப்செட் அச்சகம், பயிர் கடன், அடமான கடன், நகை கடன் உள்ளிட்ட பல சேவைகளை விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கி வருகிறது. தொடர்ந்து லாபத்தில் இயங்கி வரும் இந்த நிறுவனத்தை முடக்கும் வகையில் ஒன்றிய அரசு, தமிழக விவசாய துறையின் மூலம் விடுத்த உத்தரவில் 14 உரம், கலப்பு உரத் தயாரிப்பு உரிமைகளையும் ரத்து செய்துள்ளது.

இந்த உத்தரவானது தனியார் துறையை ஊக்கப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்ட முடிவாகும். ஒன்றிய அரசின் இந்த முடிவால் துடியலூர் கூட்டுறவு விவசாய ஸ்தாபனம் லிட் டியூகாஸ் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது. தமிழகம் முழுவதும் 28 மாவட்டங்களில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும் 500க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும் இதனால் நேரடியாக செயல் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த உத்தரவை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இந்த உத்தரவு திரும்பப் பெறப் படாவிட்டால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்களை திரட்டி போராடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தெரிவித்துள்ளார்.

# 24-வது அகில இந்திய மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட தேசியக்குழு உறுப்பினர்கள்

## மையம்

1. டி.ராஜா
2. அதுல்குமார் அஞ்சான்
3. அமர்ஜித் கவுர்
4. பினாய் விஸ்வம்
5. டாக்டர் கே.நாராயணா
6. பல்லப் சென் குப்தா
7. டாக்டர் பி.கே.காங்கோ
8. நாகேந்திரநாத் ஓஜா
9. அஜிஸ் பாஷா
10. ஆனி ராஜா
11. சி.எச்.வெங்கடாச்சலம் (வங்கி)
12. வெங்கையா (வி.ச.)
13. பி.சந்தோஷ் குமார்
14. எஸ்.வி.டாம்லே
15. அனில் ராஜிம்வாலே
16. சி.ஸ்ரீகுமார்
17. சீனிவாசரெட்டி
18. வி.எஸ்.கிரி
19. குல்சார் சிங் கோரியா
20. பேரா. அருண்குமார் (ஆசிரியர்)
21. டாக்டர் ஏ.ஏ.கான்
22. ராய்குட்டி
23. கிருஷ்ணஜா
24. விக்கி மகேஷரி (ஏ.ஐ.எஸ்.எப்.)
25. இரா.திருமலை (ஏ.ஐ.ஒய்.எப்.)
26. டாக்டர் அருண் மித்ரா

## ஆந்திரா

1. கே.ராமகிருஷ்ணா
2. முப்பால ராஜேஸ்வரராவ்
3. ஜெ.வி.சத்திய நாராயண மூர்த்தி
4. ஜி.ஒபுலேஷ்
5. ஏ.வனஜா (மாதர்)
6. டி.மாது
7. கே.சிவரெட்டி

## அசாம்

8. முன்னின் மஹதா
9. கானக் கோகாய்

## பீகார்

10. ராம் நரேஷ் பாண்டே
11. ஜானகி பஸ்வான்
12. ராஜேந்திர சிங்
13. அவதேஷ் ராய்
14. ஒம்பிரகாஷ் நாராயண்
15. பிரமோத் பிரபாகர்
16. ராஜ்ஸ்ரீ கிரண் (மாதர்)
17. நிவேதிதா ஜா (மாதர்)
18. மித்திலேஷ் ஜா
19. சஞ்சய் குமார்

## சத்தீஸ்கர்

20. மனிஸ் குஞ்சம்
21. சத்திய நாராயண் காம்லேஷ்
22. மஞ்சு கவாசி (மாதர்)

## டில்லி

23. தினேஷ் சி.வார்ஷ்னே

## கோவா

24. கிரிஷ்டோபர் ஃபோன்ஸகா

## குஜராத்

25. விஜய் ஷென்மரே

## ஹரியானா

26. தரியவ் சிங் காஷ்யப்

## ஹிமாச்சல் பிரதேசம்

27. பாக்சிங்

## ஜார்கண்ட்

28. மகேந்திர பதக்
29. மகதியோ ராம்
30. கனயமால் பஹவா
31. பி.கே.பாண்டே

## கர்நாடகா

32. சாத்தி சுந்தரேஷ்
33. விஜயபாஸ்கர்

## கேரளா

34. கானம் ரர்ஜேந்திரன்
35. பிரகாஷ் பாபு
36. இ.சந்திரசேகரன்
37. சிஞ்சு ராணி (மாதர்)
38. ராஜாஜி மேத்யூ தாமஸ்
39. கே.பி.ராஜேந்திரன்
40. கே.ராஜன் (கேரள அமைச்சர்)
41. பி.பிரசாத்
42. ஜி.ஆர்.அணில்
43. சித்தையம் கோபகுமார்
44. பி.பி.சுனீர்
45. பி.வசந்தம், வழக்கறிஞர் (மாதர்)

## லட்சத்தீவு

46. காலி இடம்

## மத்திய பிரதேஷ்

47. அரவிந்த் ஸ்ரீவஸ்த்தவா
48. ஹரிவார் சிங்

## மகாராஷ்டிரா

49. சுபாஷ் லேண்டே
50. துக்ராம் பாஸ்மே
51. சிவக்குமார் கான்வீர்
52. ராஜன் ஷ்கிர் சாகர்

## மணிப்பூர்

53. தோயிரன்
54. எஸ்.மெம்சானா

## மேகாலயா

55. சமுத்திர குப்தா

## ஒடிசா

56. அபாய் சாகு
57. அஷிஸ் கனுங்கோ
58. ராமகிருஷ்ண பாண்டா
59. கிராத் சிங்தியோ

## புதுச்சேரி

60. ஏ.எம்.சலீம்
61. ஐ.தினேஷ் பொன்னையா

## பஞ்சாப்

62. பந்த்சிங் பிரார்
63. ஜாக் குரூப் சிங்
64. நிர்மல் சிங் தாலிவால்
65. பிரதீப்பால் சிங் மரிமேகா
66. அமர்ஜித் சிங்க அசல்
67. நரிந்தர் சோகால்

## ராஜஸ்தான்

68. நரேந்திர ஆச்சாரியா
69. சுனிதா சதுர்வேதி

## தமிழ்நாடு

70. இரா.முத்தரசன்
71. நா.பெரியசாமி
72. மு.வீரபாண்டியன்
73. டி.எம்.மூர்த்தி
74. க.சந்தானம்
75. எம்.ஆறுமுகம்
76. வை.சிவபுண்ணியம்
77. வஹிதா நிஜாம் (மாதர்)
78. தி.இராமசாமி
79. மு.கண்ணகி (மாதர்)

## தெலங்கானா

80. சாடா வெங்கட் ரெட்டி
81. குன்னம்னேனி சாம்பசிவராவ்
82. பல்லா வெங்கட்ட ரெட்டி
83. பாசியா பத்மா (மாதர்)
84. டி.சீனிவாஸ் ராவ்
85. கே.சங்கர்
86. பாலநரசிம்ஹா
87. பி.ஹேமந்தராவ்

## திரிபுரா

88. யுதிஸ் திர் தாஸ்

## உ.பி.

89. டாக்டர் கிரிஷ் சர்மா
90. அரவிந்த்ராஜ் ஸ்வரூப்
91. இமிட்டாஸ் அமது
92. கிராந்தி மிஸ்ரா

## உத்தரகாண்ட்

93. சாமார் பண்டாரி

## மேற்கு வங்கம்

94. ஸ்வப்பன் பானர்ஜி
95. புராபிர் தேவ்
96. உஜ்ஜால் சவுத்திரி
97. தருண் தாஸ்
98. பாரதி அதிகாரி (மாதர்)
99. தபன் கங்குலி

## பயிற்சி உறுப்பினர்

1. ராமேஷ் சர்மா (ஜம்மு)
2. ஜி.எம்.மிஷ்ரப் (காஷ்மீர்)
3. சங்கர் லால் (டெல்லி)
4. சோமன் பிள்ளை (குஜராத்)
5. பி.டி.ஜிஸ்மோன் (கேரளா)
6. இ.டி.நரசிம்மா (தெலங்கானா)
7. மித்ரா வாசு (மையம்)
8. மகேஷ் ராத்தி (முக்தி சங்பரிஷத்)
9. என்.சிதம்பரம் ( நியூ ஏஜ்)
10. சுவம் பானர்ஜி (ஏ.ஐ.எஸ்.எப்.)
11. சுக்ஜிந்தர் மகேசரி (ஏ.ஐ.ஓய்.எப்.)
12. காலி இடம் (இப்டா)
13. காலிடம் (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்)

## நிரந்தர அழைப்பாளர்

1. ரய்லால் பி.சின்கா

## அழைப்பாளர்கள்

1. ருச்சிர் திவாரி
2. என்.பாலமல்லேஷ்

## மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர்கள்

1. ராமேந்திர குமார்
2. சதுருகன் பிரஷாத் சிங் (பிகார்)
3. டாக்டர் நாரா சிங்
4. துர்கா பவானி (மாதர், ஆந்திர பிரதேஷ்)
5. சத்யன் மோகேரி (கேரளா)
6. ராம் பஹேத்தி (மகாராஷ்டிரா)
7. ஹர்தேவ் சிங் அர்ஷி (பஞ்சாப்)
8. திருச்சி எம்.செல்வராஜ் (தமிழ்நாடு)
9. மோதிலால் (உ.பி.)
10. நிஷா சித்து (மாதர்)
11. மொஹத் யூசப் (தெலங்கானா)

## தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. டி.ராஜா | 12. ஆனி ராஜா | 23. முனின் மஹந்தா |
| 2. கானம் ராஜேந்திரன் | 13. டக்டர் கிரிஷ் சர்மா | 24. ஏ.வனஜா |
| 3. அதுல் குமார் அஞ்சான் | 14. மனிஷ் குஞ்சான் | 25. வெங்கையா (ஏ.ஐ.கே.எஸ்.) |
| 4. அமர்ஜித் கவுர் | 15. பி.சந்தோஷ் குமார் | 26. குல்சார் சிங் கொரியா |
| 5. கே.நாராயணா | 16. பிரகாஷ் பாபு | 27. இரா.முத்தரசன் |
| 6. டாக்டர் பி.கே.காங்கோ | 17. சி.எச்.வெங்கடாச்சலம் | 28. டி.எம்.மூர்த்தி |
| 7. பினாய் விஸ்வம் | 18. நாம் நரேஷ் பாண்டே | 29. சுவப்பன் பேனர்ஜி |
| 8. பல்லப் சென் குப்தா | 19. ஜானகி பஸ்வான் | 30. பகத்சிங் பரார் |
| 9. நாகேந்தரநாத் ஓஜா | 20. கே.சாம்பசிவராவ் | 31. காலியிடம் |
| 10. அஜிஸ் பாஷா | 21. சாடா வெங்கடா ரெட்டி | |
| 11. ராமகிருஷ்ண பாண்டா | 22. கே.ராமகிருஷ்ணா | |

## தமிழ்நாட்டில் இருந்து தேர்வு செய்யப்பட்ட தேசிய குழு உறுப்பினர்கள்








# 24வது அகில இந்திய மாநாட்டு பொதுக்கூட்டத் திடலில் செங்கடல் நுழைந்தது போன்ற மக்கள் வெள்ளம்



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 22.10.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## ஜனநாயக அமைப்புகளை காலில் போட்டு மிதிக்கும் ஆர்எஸ்எஸ் - பாஜகவை விரட்டியடிப்போம்!

# 24-வது அகில இந்திய மாநாட்டில் பொதுச் செயலாளர் டி.ராஜா முழக்கம்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது அகில இந்திய மாநாடு விஜயவாடாவில் நடைபெற்றது. இதனைத் தொடங்கி வைத்துப் பேசிய கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, "சிபிஐ உள்ளிட்டஇடதுசாரி சக்திகள் ஒன்றிணைந்து ஆர்எஸ்எஸ் பாஜக கூட்டத்தை கொள்கை ரீதியாக எதிர்கொள்ள வேண்டும்.**

ஆர்எஸ்எஸ் பாஜக காவிக் கூட்டம் சிறுபான்மையினருக்கு எதிராக ஆபத்தான வகுப்புவாத கொள்கைகளை கடைப்பிடிக்கிறது. பெரும்பான்மை சிறுபான்மை என மக்களைப் பிளவுபடுத்துகிறது. அந்தந்த மாநிலங்களில் சாதியத்தையும் தனது நலனுக்காகப் பயன்படுத்துகிறது. நாட்டின் நலனையும் மக்கள் ஒற்றுமையையும் பாதுகாக்க இடதுசாரிகள், மத சார்பற்ற சக்திகள், தேசபக்தர்கள் ஓரணியில் திரள வேண்டும். அதற்கு இடதுசாரிக்கட்சிகள் முன்முயற்சி எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

"அம்பானிஅதானி போன்ற கார்ப்பரேட்டுகள், ஆட்சியாளர்கள் கைகோர்த்துள்ள கூட்டுக்கொள்ளை முதலாளித்துவம் நாட்டின் பொருளாதாரத்தை அச்சுறுத்தி வருகிறது. பொருளாதார இறையாண்மை கேள்விக்குறியாக்கப்படுகிறது. மோடி ஆட்சியில் பொதுத்துறை நிறுவனங்கள திட்டமிட்டு சிதைக்கப்படுகிறது. எந்த சமூகப் பொறுப்பும் இல்லாத பன்னாட்டு பெருநிறுவனங்கள் நமது இயற்கை வளங்களைச் சூறையாடுகின்றன. வேலையில்லா திண்டாட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுநோய் காலத்தில் மோடி அரசின் தவறான நிர்வாகம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்தது. மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது".

"பொது சுகாதாரம், பொதுக்கல்வி, நிலம், வீட்டுவசதி, வேலை வாய்ப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடுவோம். நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதில் இடதுசாரிகளின் பங்களிப்பு மகத்தானது. பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் ஆர்எஸ்எஸ் எதையும் சாதித்துவிடமுடியாது. அவர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்போம்".

ஆர்எஸ்எஸ் –பாஜக கூட்டணி அனைத்து ஜனநாயக அமைப்புகளையும் காலில் போட்டு மிதிக்கிறது. மதத்தின் பெயரால் சமூகத்தை பிளவுபடுத்தும் இவர்களுக்கு எதிராக இடதுசாரிகள் மதச்சார்பற்ற சக்திகள், ஜனநாயக சக்திகள், தேசபக்தர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். இது இன்றைய காலத்தின் தேவை என்று டி.ராஜா அழைப்பு விடுத்தார்









Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.